ஸ்ரீ

தமிழரசு.

—(*)—

வணக்கம்.

அங்கயற்கண்ணம்மை.

“பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல வினையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி.”

பெரும்பற்றப்புலியூர் நம்பி.

மலர்-க.	உருத்ரோத்காரி௵ மாசி௴ 1924-௵ பிப்ரவரி-மார்ச்சு௴	இதழ் ரு.

(கதாசரித் சாகரம்.)

வரருசி சரிதம்.

(124-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் இரவில் நகரத்தைக் காப்பாற்றுவதற்கு எங்கும் சுற்றித் திரிகையில் அன்றிரவிலேயே எங்கும் சுற்றித் திரிந்துகொண்டிருக்கிற ஒரு இராக்ஷஸன் என் கண்ணெதிர்ப்பட்டான். அவன் என்னை நோக்கி இந்நகரத்தில் எந்தப்பெண் மிகவும் அழகுள்ளவளாக இருக்கிறாள்! அதனை நீ எனக்குச்சொல்வாயாக என்று வினவினான். நான் அதனைக்கேட்டு ந கை த் து அரக்கனே! எவள் ஒருத்தி எவன் மனத்திற்கிசைந்தவளோ அவள் அவனுக்கு மிக்க அழகுள்ளவளாகத் தோன்றுவாள் என்று விடைபகர்ந்தேன். அவ்விராக்ஷஸன் அதனைக்கேட்டுச் சுவாமி! நான் தினந்தோறும் இதே கேள்வியை ஒவ்வொருவரையும் கேட்டுவந்தேன். அ வ ர் க ள் நேரான விடைகூறத் தெரியாமையினால் என்னாற் கொல்லப்பட்டு எனக்கு ஆகாரமாயினர். இன்று நீர் ஏற்றவிடைகூறி என்னை நீ வென்றுவிட்டீர். நான் உம்மிடத்தில் மகிழ்ச்சியுள்ளவனாக இருக்கின்றேன்.

இன்றுமுதல் நீர் எனக்குத் தோழனாக இருக்கவேண்டும். நீர் என்னை எப்பொழுது நினைக்கிறீரோ அப்பொழுது உம்மெதிரில்வந்து உமக்கு வேண்டிய உபகாரத்தைச் செய்வேன் என்றுகூறி மறைந்துவிட்டான். அன்றுமுதல் எனக்கும் இராக்ஷஸனுக்கும் நட்பு உண்டாயது'' என்றுகூறினான். சகடாலன் அதனைக்கேட்டுச் "சுவாமி! நீர் மிகவும் பெருமை பொருந்தியவராக விளங்குகிறீர்; நான் கங்காதேவியைத் தரிசிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். அதனைத் தேவரீர் நிறைவேற்றி வைக்கவேண்டும்'' என்று கேட்டான். வாருசியதனைக்கேட்டுத் தம் மனத்தில் கங்காதேவியைத் தியானம் செய்தார். உடனே கங்கை அவர்கள் எதிரில்வந்து தோன்றினாள். வாருசி கங்கையைத் துதித்தார். கங்காதேவி அவர் துதியைப் பெற்றுக்கொண்டு மறைந்துவிட்டாள். அதுமுதற்கொண்டு சகடாலன் வாருசிக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டும் அவரிடத்தில் அன்பைச் செலுத்திக்கொண்டும் வந்தான்.

வாருசி சகடாலன் வீட்டில் மறைந்து வாழும்காலத்தில் யோகநந்தனுடைய புதல்வனான இரண்யகுப்தன் என்பவன் ஒருநாள் வனத்தில் வேட்டையாடச் சென்றான். அவன் வனத்தில் வேட்டையாடிக்கொண்டே குதிரையை வேகமாகச் செலுத்தித் தன் பரிவாரங்களினின்றும் பிரிந்து தனிமையாக ஆயினான். பகல் சென்றுவிட்டது. இரவுவந்தது. அரசகுமாரன் அக்காட்டில் அவ்விரவில் மிக்க அச்சமுள்ளவனாக ஆயினான். இரவில் கொடியமிருகங்கள் தன்னைக் கொன்றுவிடுமே என்று கருதினான். எவ்விதத்திலும் இன்றிரவை இங்கே கழிக்கவேண்டியதே என்றுஎண்ணி வனவிலங்குகளால் ஏறிவாமுடியாத ஒரு பெரிய மரத்தில்ஏறி அங்கே ஒருபெரிய கிளையில் படுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அக்காட்டில் ஒரு காடி சிங்கத்தினால் துரத்தப்பட்டு அம்மரத்தின் மேலேறிக்கொண்டது. அக்காடியைக்கண்டு அரசகுமாரன் நடுங்கினான். காடி அவனை நோக்கி, "அரசனே! அஞ்சவேண்டாம். என்னை உன் தோழனாக நினைத்துக்கொள்'' என்று கூறி யவனையடைந்தது. அவனும் சிறிது அச்சம் நீங்கினான். பின்னர் அது அவனைநோக்கி "நீ என்மடியில் படுத்துறங்குவாய்; நான் விழித்துக்கொண்டிருக்கின்றேன்'' என்று

கூறிற்று. அவ்விதமே அவன் அதன்மடியில் படுத்துறங்கினான். அப்பொழுது கீழேநின்ற சிங்கம் கரடியைநோக்கி, "நீ அந்தமனிதனைத் தள்ளிவிடு. நான் அவனையுண்டு பசியாறிச் செல்கிறேன்" என்றது. அதற்குக்கரடி "என்னைநம்பின இவனுக்கு நான் மறந்தும் கேட்டை மனத்தில் நினையேன்" என்றுகூறி மறுத்துவிட்டது. சிறிது பொழுதுகழித்து அரசகுமாரன் விழித்துக்கொள்ளக் கரடி அவன் மடியில் படுத்துக்கொண்டு சிறிது கண்ணயர்ந்தது. அப்பொழுது சிங்கம் "ஓ மனிதனே! அதுகொடிய விலங்கு; அதுவிழித்துக்கொண்டால் உன்னையுண்டு பசியாறிவிடும்; ஆதலால் நீ அதனைக் கீழே தள்ளிவிடு; அதனையுண்டு நான் என்வழியே செல்லுவேன். பின்னர் நீ பயமின்றி யிருக்கலாம்." என்று கூறிற்று.

அரசகுமாரன் தான் கரடியைக் கீழே தள்ளிவிட்டால் அச்சமற்றிருக்கலாம் என்றுகருதித் தன்னை நம்பியுறங்குகின்ற கரடியைக் கீழே தள்ளிவிட்டான். ஆனால் அது பூமியில் விழாமல் திடீரென்று விழித்துக்கொண்டு ஒரு மரக்கிளையைப் பற்றியேறி "அரசகுமாரனே. உன்னை நம்பினவனை நீ மோசம் செய்தமையால் இப்பொழுது முதல் நீ பைத்தியம் கொண்டவனாக ஆவாய்; பின்னர் ஒருகால் இவ்வரலாற்றையறிந்த எவராவது உனக்கு இதனை நினைப்பூட்டினால் உன்னுடைய பைத்தியம் மாறும்" என்று சாபத்தையும் அதன் விடுதலையையும் செய்தது.

அப்பொழுதே இரண்யகுப்தன் பைத்தியம்கொண்டு காட்டில் திரிந்து இறுதியில் பாடலிபுத்திர நகரத்தையடைந்தான். யோகாநந்தன் தன் மகன் உன்மத்தனாக ஆனதையறிந்து அவன் அவ்விதம் ஆயினமைக்குக் காரணத்தையுணரமுடியாமல் மயங்கிக்கொண்டிருந்தான். ஒருநாள் யோகாநந்தன் சகடாலன் முதலிய மந்திரிகளின் எதிரில் "வரருசி உயிரோடிருப்பானாகில் இதன் காரணத்தையுணர்ந்து கூறுவதுமன்றி இதனையும் போக்கியருளுவானே; அவனை நான் வீணாகக்கொன்றேனே" என்று மிகவும் கழிவிரக்கம் கொண்டான். சகடாலன், அரசன் உண்மையாகவே வரருசிக்கு வருந்துகின்றான் என்று அறிந்து இதுவே வரருசியைக்குற்றமற்றவன் என்று வெளிப்படுத்துவதற்குரிய வேளையென உணர்ந்து, அரசனை

நோக்கி, "அண்ணலே! வாருசிகொல்லப்படவில்லை. உயிருடனிருக்கின்றான்" என்று கூறினன். அதனைக்கேட்ட அரசன் மிக்க பரபரப்புடன் "ஆ அது உண்மையா? அங்ஙனமாயின் அவனை உடனே இங்கேயழைத்து வருக. நான் அவனைக்கண்ணால் பார்க்கவேண்டும். அவன் குற்றமற்றவன்" என்று சகடாலனை நோக்கிக்கூறினன்.

சகடாலன் அவ்விதமே யழைத்து வருவதாகக்கூறித் தன்னில்லம் சென்று வாருசியை அரசசமுகத்திற்கு வரவேண்டும் என்று அழைத்தான். ஆனால் வாருசி அங்கே செல்வதற்கு உடன்படவில்லை. பின்னர், சகடாலன் மிகவும் வற்புறுத்தியதன்மேல் அரசனுடைய சபையையடைந்தான். அரசன் வாருசியை யேற்றுபசரித்தான். வாருசி அச்சபையின்கண் ணுள்ள பைத்தியம் கொண்ட இராஜபுத்திரனை இரண்யகுப்தனைக்கண்டதும், இவன் தன்னை நம்பின நண்பனை மோசம் செய்தான்; அதனால் இவன் பைத்தியம் கொண்டவனாகும் வண்ணம் சபிக்கப்பட்டான் என்று காட்டில் நடந்த வரலாறு முழுமையும் சரஸ்வதியின் அருளால் அறிந்து அரசனுக்குத் தெரிவித்தான். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த இராஜபுத்திரன் காடி கூறியவண்ணமே சாபத்திலிருந்தும் விடுபட்டு முன்போலாயினன். அரசன் வாருசியின் அறிவினை வியந்து "வாருசியே! வனத்தில் நடந்த இவ்வாலாற்றினை நீ அறிந்தது எவ்விதம்" என்று வினவ, வாருசி "அரசனே! உன் மனைவியின் இரஹஸ்யமான இடத்திலுள்ள மறுவினை எவ்விதமறிந்தேனோ அவ்விதமே இதனையும் மற்ற இலக்கணங்களாலும் அனுமானத்தினாலும் முற்றிலும் அறிந்தேன்" என்று விடையிறுத்தான்.

யோகநந்தன் அதனைக்கேட்டு மிகவும் வெட்கமும் அனுதாபமும்கொண்டு தான் ஆராயாமல் செய்தவற்றிற்கு வருந்தினன். பின்னர் அவன் வாருசிக்கு வெகுமானங்கள்செய்து உபசரிக்க வந்தான். வாருசி அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் தான், அரசன் எண்ணிய வண்ணம் கெட்டஒழுக்கமுள்ளவன் அல்லன். மிகவும் தூய்மையுள்ளவன் என்பதை நிலைநாட்டிவிட்டுத் தன் வீட்டை நோக்கிச்சென்றான். வேலை கரையிடிந்தாலும் வேதம்நெறி பிறழ்ந்தாலும் ஞாலம் முழுதும் நடுவிழுந்தாலும் சீலம் ஒழிவரோ பேரியோர்?

(தொடரும்.) பத்திராசிரியர்.

புகையிலை.

(132-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வடிக்கட்டை சிறிது சுறுசுறுப்பாக காரமாயிருத்தலை மதித்துச் சிலநாள் இப்படிக்காலம் போக்கிப் பின்பு பழய கறுப்பனே கறுப்பனாகி முன்பு வாசனைப்புகையிலையை எப்படி கெடுதி கூறிச் சலித்து விட்டார்களோ அப்படியே இந்தப்புகையிலைகளையும் மங்களம்பாடத் தொடங்கினார்கள். "புகையிலை உடம்புக்குப் பொல்லாக் கெடுதியை யுண்டுபண்ணி உடம்புச் சத்தையெல்லாம் வாங்கிவிடுகிறது" என்று தங்களுக் கெட்டிய சில கெடுதிகளை அனுபவவாயிலாய்க் கூறத்தொடங்குபவராயினர்.

இப்படியாகச் சனங்கள் ஆவலொடு எதனையும் முதல் முதல் அறியாமையால் வேடிக்கையாக எளிதாய்ப் பழகிவிடுகிறார்கள். பின்பு கொடிய பழக்கத்தில் ஆழ்ந்து மீள முடியாது ஆக்கைவலி குன்றி அறிவழிந்து செயலிழந்து இளமையே முதுமையாகி நோயும் பாயுமாகப் படாதபாடெல்லாம்பட்டு துன்பத்திற்கிரையாகி அருமருந்தன்ன உயிரை அநியாயமாய்ப் போக்கிக்கொள்ளுகிறார்கள்.

புகையிலையின் உல்லாச வாழ்வை வீணாக வரைந்து படிப்பவர்கள் உல்லாசத்தைக் குறைத்து விட்டேன். இஃதன்றியும் இன்னும் நமது இந்திய நாட்டில் இப்படியே உல்லாசவாழ்வாக தெலுங்கு நாட்டில் ஆண்பெண் அடங்கலாகச் சுருட்டையும் பம்பாய் மாகாணத்தில் பீடியையும், நைஸாம் இராஜ்ஜியத்தில் சுருட்டோடு குடாக்கு சுங்கான் முதலியவைகளையும், வங்காளத்தில் குடாக்கோடு சிகரெட்டையும் இன்னும் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொருவகையாகக் கையாடிக்கொண்டு வருகிறார்கள்.

இதனருமையை அறிந்த ஜப்பானிய கவர்ன்மெண்டார் இந்தப் புகையிலைக்கு ஒரு மதிப்பைத் தந்திருக்கிறார்கள். அந்தமதிப்பு லைசென்ஸ் இல்லாமல் விற்பனை செய்யக் கூடாது என்ற உத்தரவு

தான். அந்த உத்தரவை நமது கவர்ன்மெண்டார் தற்போது பின் பற்றவில்லை என்றாலும் தங்களுடைய ஆளுகையைத் தொடர்ந்து பக்கத்திலுள்ள புதுச்சேரி, காரைக்கால், திருவாங்கூர் முதலிய அரசாங்கம் டியூட்டி என்று நமது நாட்டிலுள்ளவர்கள் புகையிலையைக் கொண்டுபோவதைத் தடைப்படுத்தும் முறையாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இனி நமக்கும் இப்புகையிலையின்பொருட்டு என்ன நிபந்தனை ஏற்படுத்தக் கூடுமோ என்று எண்ணவேண்டியு மிருக்கிறது.

இதற்குமுன் புகையிலையின் நச்சுப் பொருள்களால், சனங்களுக்கு உண்டாகும் அபாயத்தை ஒருவாறு தெரிவித்ததற்கு ஏற்ப புகையிலையை வாயிலிட்டு அடக்கிக்கொள்ளுவதினால் வருந்தீங்குகளையுஞ் சிறிது தெரிவிக்கிறேன்.

"சோம்பேறிகளுக்கு உல்லாசத்தைத் தருதற்குரியதும் ஏற்றதுமான வழக்கம் புகையிலைதான்" என்று நெப்போலியன் போனப்பார்ட் கூறியிருக்கிறார்கள். அன்றியும் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரத்திய பல்கலைக் கழகத்திலுள் ஓர் பிரிவான பந்தய சங்கம் தீர்மானித்த உத்தரவுப்படி அக்கூட்டத்தில் சேர்ந்து பயின்று வரும் வீரர்கள் பயிற்சி முடிந்து வெளியேறும்வரை புகையிலையையும் மதுபானங்களையும் கைக்கொள்ளக் கூடாது என்பதை வாதித்துக்கொண்டே வந்திருக்கிறதென்று அதன் மேல் விசாரணைக்காரரான டாக்டர் ஏ. ஏ. ஸ்டாக் என்பவர் அறிவிக்கிறார்.

நகரங்களிலிருந்து பரவுவது நாகரீகமானதால் "தற்போதைய நாகரீக மென்ற பொல்லாத சாபமே புகையிலை" என்பதை மிஸ்டர் ரஸ்கின் என்பவர் நவில்கின்றார். கொலம்பியா நகரின் பல்கலைக்கழகத்திய வைத்திய மேல்விசாரணைக் காரரான டாக்டர் ஜி. எஸ். மெயிலன் என்பவர் "வளரும் பிள்ளைகளுக்கு அதிகக் கேடுண்டாக்குவது புகையிலை" என்று நீண்ட அனுபவத்தின் மேல் கூறுகின்றார். நமது நாட்டில் உள்ளவைத்திய நிபுணர்களும் ஆங்கிலத்தில் பயின்ற மேதாவிகளும் புகையிலையின் கெடுதிகளை விளக்கமாகவும் ஏராளமாகவும் எடுத்துக்கூறியுள்ளார்கள் என்பது, அவர்கள் எழுதிய வியாசங்களால் அறியக்கூடியதாயிருக்கிறது. இதனோடு விரிக்கிற் பெருகு

மென்றுட்கொண்டு கிறுத்திக்கொண்டு இதன் பின் புகையிலையின் தீங்குகளைக் கூறுகின்றேன்.

புகையிலையால் உண்டாகும் தீங்குகள்.

(1) புகையிலை இலாகிரிப் பொருள்களுள் ஒன்றென்று அறியப்பட்டிருக்கிறது.

(2) புகையிலை மனிதர்களின் உல்லாச வாழ்விற்கு ஆணித்தரமான ஆண் தன்மையையும் ஊக்கத்தையும் அழித்து அஜீரணத்தையுண்டுபண்ணி நாடியின் வலுவை அடியோடு கெடுத்து விடுவனவற்றுள் முதன்மை பெற்றிருக்கிறது.

(3) புகையிலையை வாயில் ஒதுக்குவதால் பல்லின் வலிமை கெட்டுப்போய் விடுகிறது.

(4) பல்லைக் கெட்டியாகவும் வரிசையாகவும் நெருக்கமாகவும் ஒழுங்காகப் பிடித்துக் கொண்டிருக்கும் எயிற்றின் வளர்ச்சியையும் புஷ்டியையும் வலிமையையும் அடக்கி ஒடுக்கிவிடுகிறது.

(5) எயிறுகரைந்துபோம்படி வேலைசெய்து நெருங்கியுள்ள ஒவ்வொரு பல்லிற்கு மிடையே இடைச்சந்து உண்டாக்கிப் பல்வரிசையின் வலிமையை நிலைகுலையச் செய்துவிடுகிறது.

(6) பல்லடிப் புறங்களிலும் எயிறு அழிந்து போம்படி வேலை செய்து பல்லின் வேரிலும் தாக்கிக் கெடுதியை விளைவிக்கிறது.

(7) பல்துலக்குதற்குரிய தகுந்தபொருள்களைக் கொண்டு பல்லைத் தேய்த்துத் தெளிவாய்க் கழுவிவைத்துக் கொள்ளாது அலட்சியமாக விட்டுவிட்டால் புகையிலைக்கறை பல்லைப்பற்றிக்கொன் ஒட்டுவாரொட்டியாய்க் கேட்டுக்கடிப்படையாய் விடாது கறை மாய் ஒட்டிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது.

(8) பல்லிற் பிடித்தகறை நாளாகவாகக் காரையாய் பல்லைப்பிடித்துக்கொண்டு பல்லின் அடிப்பாகத்தை தொடங்குகின்றது.

(9) காரைப்பிடிப்பால் அப்பல்வலிமை அழிந் நொறுங்கிப் பொடிபொடியாய் உதிர்ந்து பல்லில் விடுகிறது.

(10) பல்லின் கூச்சம் பல்லின் வேர்வரை சென்று பல்லிற்குண்டான கெடுதியைப் பல்லசைவினால் பின்பு புலப்படுத்திவிடச் செய்கின்றது.

(11) புகையிலை ஒதுக்குந் தீயசெயலானது சுமார் ஏழுவயது முதல் 22 வயது வரை திரும்பி முளைத்துவந்த பற்களை பாதிவயதிற்குள்ளே விழுந்து போம்படி செய்து அவற்றிற் கீடாக பொய்ப்பற்களைநிரப்பிவிடும்படி செய்கின்றது.

(12) புகையிலையானது பூரிப்பான் அழகிய எடுப்புள்ள கன்னங்களின் தசைகளை வற்றடித்துவிட்டு நல்ல முகத்தைக்குரங்கு முகமாக மாற்றிவிடுகிறது.

(13) கன்னப்புற்று, கன்னப்பிளவை, பற்சூற்று, பல்லரணை, எயிறு வீங்கி வலியெடுத்தல், பற்புழு இவைகளைப் புகையிலை உண்டு பண்ணிவிடுகிறது.

(14) நாவின்சுவையுணர்வைக் கெடுத்து தொண்டையிற் புண்ணுண்டாக்கி உண்ணாக்கை வளரச்செய்து நோய்வாயிலகப்படுத்திவிடுகிறது.

15) புகையிலை, ஜீரணம் செய்ய அமைத்துள்ள பசை நீராகிய எச்சிலை ஓயாமல் உமிழச்செய்து பல், வாய், தொண்டை, உள்நாளம், இரத்தாசயம், நுரையீரல், சிறுகுடல், பெருங்குடல், உணவுப்பை, கல்லீரல், பித்தப்பை முதலியவற்றின் நல்லநிலைமையைக் கெடுத்து அஜீரணத்திற்குள்ளாக்கிச் செரியாதவழியைச் செய்து அவற்றால் யிற்றுவலி, குன்மம்முதலிய பயங்கரமான நோய்களை உண்டு ண்ணி இரத்தத்தைமாற்றி தேகத்தை வெளுக்கச்செய்து பை பலவீனத்திற்குள்ளாக்கிவிடுகிறது.

6) வேகமாய் நடத்தல், மேட்டில் ஏறுதல், ஓடுதல், பாரத் கிவைத்தல் முதலிய சிறிய உழைப்புகளிலும் திகைப் ருமூச் செறியும்படி செய்து ஆவி துறந்துவிடுவது டப்பைக் காட்டி மயங்கவைத்துச் சோர்ந்து போம் ன்றது. (தொடரும்),

ம. சுந்தரபாண்டிய ஓதுவார்,

காமந்தகீய நீதிசாரம்.

(148-ம் பக்கத்தொடர்ச்சி.)

3. பிறர்க்குவந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாகநினைத்து இரக்கமுள்ளவனு யிருந்துகொண்டு அத்துன்பத்திலிருந்து அவர்களைக் கைதூக்கிவிடவேண்டும்.

4. துக்கமாகிய சேறுள்ள சமுத்திரத்தில் அழுந்திக்கிடக்கிற மெலியோர்களைக் கைதூக்கிவிடுகிறவர்களைவிட ஜனங்களுக்கு நன்மையைக்கருதுகிற பெரியோர்கள் வேறுஇல்லை.

5. அரசன் தருமத்திலிருந்து நீங்காமல் தண்ணளியுடன் கூடினவனுய்த், துக்கப்படுகிறவர்களையும் பற்றுக்கோடற்றவர்களையும் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்திலிருந்து காப்பாற்றவேண்டும்.

6. தண்ணளி என்பது சிறந்தகுணம் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால் அரசன் தண்ணளியுடன் ஏழைகளைக் காப்பாற்றவேண்டும்.

7. அரசன் தனக்கு இன்பத்தைக்கருதி ஏழைகளைத்துன்பமடையும்படி செய்யக்கூடாது. ஏழைகள் துன்புறுத்தப்பட்டால் அவர்களுடைய துன்பத்தினுலுண்டான கோபத்தினுல் அரசன் கேடடைவான்.

8. நல்ல குடும்பத்தில் பிறந்த அரசன் சிலவாகிய இன்பத்திற்கு ஆசைப்பட்டு ஆராயாமல் ஏழைகளைத் துன்பமடையும்படி செய்யமாட்டான்.

9. மனுேவியாதியும் சரீரவியாதிகளும் நிறைந்த அழியும் தன்மை வாய்ந்த சரீரத்தின் நன்மைக்காகச் செய்யத்தகாத செயல்களை எவன்தான் செய்வான்?

10. நீராடுதல், சந்தனம் முதலியவை பூசிக்கொள்ளுதல் ஆடையாபரணங்களை அணிதல் முதலியவைகளால் சிலகாலம் அழகுள்ளதாகச் செய்யப்படுகிற இச்சரீரம் நீர்க்குமிழிபோலவும் (மேகத்

தின்) நிழலைப்போலவும் உடனே அழியக்கூடியது என்று கருத வேண்டும்.

11. பெரியோர்கள், புயற்காற்றினால் அங்குமிங்கும் சுழலும் மேகக்கூட்டம்போலுள்ள இந்திரிய விஷயங்களால் இழுக்கப்பட மாட்டார்கள்.

12. பிராணிகளுடைய வாழ்நாட்கள் ஜலத்தில் தோன்றும் சந்திரபிம்பம்போல் நிலையற்றது என்று எண்ணி எப்பொழுதும் ஏழைகளைக் காப்பாற்றுதல் முதலிய நல்லகாரியங்களைச்செய்தல் வேண்டும்.

13. இவ்வுலகம் பேய்த்தேர் (கானல்நீர்) போலத்தோன்றி யழியும் தன்மைவாய்ந்தது என்று கருதி அறம் பொருள் இன்பம் இவற்றை அடைவதற்குப் பெரியோர்களைச் சேர்ந்திருக்க வேண்டும்.

14. சுதைதீட்டப்பெற்ற மாடம் சந்திரனுடைய ஒளியால் பார்ப்பதற்கு இனிமையாக இருப்பதுபோலப் பெரியோர்களுடன் சேர்ந்த அரசன், அறம் பொருள் இன்பங்கள் நிறைந்து விளங்கு கிறான்.

15. பெரியோர்களுடைய செயல்கள் ஜனங்களுடைய மனத்தை மகிழ்விப்பதுபோலக் கலைகள் நிறைந்த சந்திரனும் மலர்ந்த தாமரைகள் அடர்ந்த தடாகமும் மகிழச்செய்வதில்லை.

16. கோடைகாலத்து வெயிலினால் வெப்பமடைந்ததும் பயத்தைச்செய்வதும் தங்குமிடமில்லாததும் ஆகிய பாலைவனம் போன்ற தீயவர்களுடைய கூட்டுறவை விலக்கிவிடவேண்டும்.

17. காய்ந்த மரத்தை நெருப்பு எரிப்பதுபோலத் தீயவர்கள் கல்வியறிவும் நல்லொழுக்கமுமுள்ள பெரியோர்களைக்காரணமின்றி மனத்திற்குத் துன்பத்தைக் கொடுத்துவருந்தும்படி செய்கிறார்கள்.

18. தீயவர்களுடன் சேர்ந்திருப்பதைப் பார்க்கிலும் மூச்சுவிடுந்தோறும் உண்டாகும் நெருப்புப்போன்ற விஷத்தால் சாம்பல் நிறமான வாய்களையுடைய பாம்புகளுடன் சேர்ந்திருப்பது மேலானதாம்.

19. பூனை, தனக்கு அன்னமிட்டவர்கள் கையைக்கீறுவதுபோலத் தீயோர்கள் தங்களுக்கு அன்னங்கொடுத்த நல்லமனமுள்ளவர்களுடைய கையையே வெட்டிவிடுகிறார்கள்.

20. தீயர்வர்கள் பாம்பை ஒத்தவர்கள். பாம்பு இரண்டு நாக்குள்ளது. நல்லமந்திரங்களாலும் போக்கமுடியாத கொடிய விஷத்தையுடையது; தீயவர்கள் இருவிதமான வார்த்தைகளையுடையவர்கள்; நல்லவர்களுடைய உபதேசங்களுக்கும் வசப்படாத கொடிய தன்மையை யுடையவர்கள்.

21. தனக்கு நன்மையை விரும்பும் ஒருவன் போற்றத்தகுந்த நல்லவனுக்கு வணக்கமுடையவனா யிருப்பதுபோலவே, துர்ச்சனனுக்கும் வணக்கமுடையனாயிருத்தல்வேண்டும்.

22. ஜனங்களைத் தன்வயப்படுத்தவிரும்பும் ஒருவன் எல்லா ஜனங்களுடைய மனத்தையும் மலரச்செய்யும்படியான உலகவழக்கோடு பொருந்திய இனியவார்த்தைகளைக்கூறி மேலான அன்பைச் செய்துகொள்ளவேண்டும்.

23. கடுஞ்சொற்சொல்பவன் தன்பொருளைப்பிறர்க்கு வழங்குபவனாயிருந்தாலும் யாவராலும் அஞ்சத்தகுந்தவனாகிறான். ஆகலால் மனத்தைக்கவரும் வார்த்தைகளையேகூறி யாவரையும் வசப்படுத்தவேண்டும்.

24. அறிவுள்ளவன் . தான் துன்புறுத்தப்பட்டாலும் பிறர் மனத்தைத் தொளைத்துப் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளை ஒருவரிடத்தும் கூறக்கூடாது.

(தொடரும்)

பத்திராசிரியர்.

தினமணி (ஸூரியன்.)

—:o:—

(155-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஸூர்யன் ஆயிரம் கிரணங்களையுடையவர். அவருக்கு அதனால் ஸஹஸ்ரகிரணன் என்ற பெயருண்டு. இந்த ஆயிரம்கிரணங்களில் முந்நூறுகிரணங்கள் சித்திரைமுதலான நான்குமாஸங்களில் உஷ்ணத்தை விளைவிக்கின்றன. இந்தக்கிரணங்களுக்கு "சுக்ரநாடி" என்றுபெயர். நானூறு கிரணங்கள் ஆவணி முதலான நான்குமாதங்களில் ஜலத்தை விளைவிக்கின்றன. இந்தக் கிரணங்களுக்கு "அமிருதநாடி" யென்று பெயர். முன்னூறுகிரணங்கள் மார்கழிமுதலான நான்கு மாஸங்களில் பனியை விளைவிக்கின்றன. இந்தக்கிரணங்களுக்குசந்திரநாடியென்று பெயர். இவைகள் தவிரமுக்யமாய்வேறு ஏழுகிரணங்களுண்டு. அவைகளில் 1. ஸுஷும்ன என்ற கிரணம் சந்திரனையும் 2. ஸம்யத்வஸு என்ற கிரணம் அங்காரகனையும் 3. விசுவகர்மா என்ற கிரணம் புதனையும் 4. அர்வாக்வஸு என்றகிரணம் பிருஹஸ்பதியையும் 5. விசுவவ்யசா என்ற கிரணம் சுக்ரனையும் 6. ஸ்வராட் என்ற கிரணம் சனியையும் 7. ஹரிகேச என்ற கிரணம் நட்சத்திர மண்டலத்தையும் அடைந்து பிரகாசத்தைக் கொடுத்து உலகத்துக்கு நன்மையை விளைவிக்கின்றன. இந்த ஸுஷும்ன முதலான ஏழுகிரணங்களும் பிரளயகாலத்தில் ஆரோசகன் ப்ராஜன் படரன் பதங்கன் ஸுவர்னன் ஜ்யோதிஷீமான் விபாஸன் என்ற ஏழுஸூர்யர்களாக ஆகி உலகத்தை அழித்துவிடும். இந்தக்கிரணங்களையே ஆருணமந்திரத்தில் "ஸப்தஸூர்யா இத்யாசார்யா:" என்று சொல்லப்பட்டிருக்கிறது

ஸூர்யனுடைய ஸம்வத்ஸராத்மகமான ஒரேசக்ரமுள்ள ரதம் ஜ்யோதிஸ்வரூபமானது. பன்னிரண்டு மாஸங்களோடு கூடிய ஆறு ருதுக்களும் ஆரங்களாகும். உத்தராயணம் தக்ஷிணாயநம் இரண்டும் கூபரமாகும். (கூபரமென்பது ஸாரதியின் ஸ்தானம்) பிராதக்காலம் மாத்யான்ஹகாலம் ஸாயங்காலம் என்ற ஸவநத்ரயமும் சக்ரத்தின் மத்தியில் கும்பத்தைச் சுற்றியிருக்கும் நாபியாகும். முந்நூற்றறுபத்து ஐந்துநாள்களும் சக்ரத்தின் ப்ராந்த (அடிப்புறவட்டை) பாக

மான நேமியாகும் க்ஷணம் என்ற நிமேஷார்த்தகாலம் அக்ஷதண்டமாகும். நிமேஷம் என்றகாலம் ஹாரதிஸ்தானத்துக்கு அடுத்த அனுகர்ஷம் என்ற ஸ்தானமாகும். கலா (நாழிகை) நுகமாகும். முகூர்த்தங்கள் அங்கப்ரத்யங்கங்களாகும். அஹல் (பகல்) ரதிகனுடைய ஸ்தானமாகும். ராத்திரி ரதிகன் (எஜமான்) மறைந்திருக்கும் ஸ்தானமாகும். தர்மம் துவஜமாகும். அர்த்தம் காமம் இரண்டும் ரதிகனுடைய இருபக்கத்திலுமுள்ள பாரிபர்சுவிகர்களுடைய ஸ்தானமாகும். இவ்விதமான ஸௌர்யரதம் பதினாயிரம யோசனை விஸ்தாரமுள்ளது.

இந்தரதத்தின் ப்ராந்த பாகங்களில் துவாதசாதித்யர்கள் முதலான பரிவாரங்கள் வசிக்கிறார்கள். மாடரன், பிங்களன், தண்டன் என மூன்று பாரி பார்சுவிகர்கள். காசிபபுத்ரனான அருணன் ஸாரதியாவன். அக்கினிபகவானுடைய ஏழு நாக்குகளின் அம்சமான காயத்ரி, உஷ்ணிக், அனுஷ்டுப், பிருஹதீ, பங்க்தி, திருஷ்டுப், ஜகதி என்ற ஏழுசந்தஸ்ஸுகளும் குதிரைகளாகும்.

3. மயூகம்.

தாதா, அர்யமா, மித்ரன், வருணன், இந்திரன், விவஸ்வான், பர்ஜன்யன், பூஷா, அம்சுமான், கபஸ்திமான், துவஷ்டா, விஷ்ணு, என்ற துவாதசாதித்யர்களும், புலஸ்தியன், புலஹன், அத்ரி, வஸிஷ்டன், அங்கிரஸ், பிருகு, பாத்வாஜன், கௌதமன், காசிபன், கிருது, ஜமதக்னி, கௌசிகன் என்றபன்னிரண்டுமஹரிஷிகளும், வாஸுகி, கங்கீரன், தக்ஷகன், நாகன், ஏலாபுத்திரன், சங்கபாலன், ஐராவதன், தனஞ்சயன், மஹாபத்மன், கார்கோடகன், கம்பளன், அசுவதான் என்ற பனிரண்டு நாகங்களும், தும்புரு, நாரதன், ஹாஹா ஹூஹூ, விசுவாவஸு, உக்ரஸேநன், வஸுருசி, ஸர்வாவஸு, சித்ரஸேனன், ஊர்ணாயு, திருதராஷ்டிரன், ஸௌர்யவர்ச்சா என்ற பன்னிரண்டு கந்தர்வர்களும், கிருதஸ்தலா, புஞ்சிகஸ்தலா, மேனகா, ஸஹஜன்யா, பிரம்லோசந்தீ, அனும்லோசந்தீ, கிருதாசீ, விசுவாசீ, பூர்வசித்தீ, திலோத்தமா, ரம்பா, ஊர்வசி என்ற பனிரண்டு அப்ஸரஸ்ஸுகளும், ரதௌஜா, ரதசித்ரன், ஸுபஹூ, ரதவர்ணன்,

ஸுரோதன், அருணன், ஸுஷேணன், ஸேநஜித், தார்க்ஷயன், அரிஷ்டநேமி, ரதஜித், ஸத்யஜித் என்ற பனிரண்டு யாக்ஷக்கிராமணிகளும், ஹேதி, பிரஹேதி, பௌருஷேயன், வதன், ஸர்ப்பன், வியாக்ரன், புனச்சாபன், வாதன், வித்யுதன், திவாகரன், பிர்மோபேதன், யக்ஞோபேதன் என்ற பனிரண்டு ராக்ஷதர்களும் முறையே சித்திரை முதலான பனிரண்டு மாதங்களிலும், ஸூர்யரதத்திலிருந்து கானங்களாலும் வேதஸ்துதிகளாலும் மற்றுமுபசாரங்களாலும் ஸூர்யனை உபாஸிக்கிறார்கள்.

பிர்ம்ம புத்திரர்களான வாலகில்யர்களென்ற பத்துலட்சம் மஹரிஷிகள் பரமேசுவரப்பிரஸாதம் பெற்றவர்கள் ஸூர்யனுடைய ரதத்திலேயே இருந்து காயத்ரீ மந்திரத்தினால் அபிமந்திருணம் செய்த ஜலத்தை வஜ்ராயுதமாக எவி பிர்மாவின் வரபலத்தால் தினந்தோறும் ஸூர்யனுடைய கதிக்கு இடையூறாகத் தோன்றிய மந்தேஹாள் என்ற அஸுரர்களை நாசமாக்குகிறார்கள். இவ்விதமான பரிவாரங்களுடன் மண்டலாதிபதியான சூரியன் ஏகசக்கரரதத்துடன் நிராலம்பமான ஆகாசத்தில் நக்ஷத்திரமார்க்கத்தில் சஞ்சரிக்கிறார். அந்த நக்ஷத்திரமார்க்கம் மூன்று. ஒவ்வொன்றிலும் மும்மூன்று உபமார்க்கங்கள் உண்டு.

4. மயூகம்.

(1) தக்ஷிணபாகத்தில் அஜவீதி, மிருகவீதி, வைசுவாநரவீதி என்ற மூன்று உபவீதிகளுடன் கூடிய ஜாரத்கவமார்க்கம்.

(2) மத்யபாகத்தில் ஜர்ரத்கவீவீதி, கோவீதி, ஆர்ஷபீவீதி என்ற மூன்று உபவீதிகளுடன் கூடிய வைசுவாநரமார்க்கம்.

(3) உத்தரபாகத்தில் நாகவீதி, ஐராவதவீதி, கோவீதி என்ற மூன்று உபவீதிகளுடன் கூடிய ஐராவதமார்க்கம். இந்த மூன்று மார்க்கங்களிலும் ஸூர்யாதிக்கிரஹங்கள் சஞ்சரிக்கும் விதம்: அசுவதி, பரணி, கார்த்திகை இந்த மூன்றிலும் நாகவீதியிலும், ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை இந்த மூன்றிலும் கோவீதியிலும், புனர்பூசம், பூசம், ஆயில்யம் இந்த மூன்றிலும் ஐராவதவீதியிலும்

ஆக ஐராவதமென்று உத்தரமார்க்கத்திலும் மகம், பூரம், உத்திரம் இந்த மூன்றிலும் ஆர்ஷபீவீதியிலும், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி இந்த மூன்றிலும் கோவீதியிலும், விசாகம், அனுஷம், கேட்டை இந்த மூன்றிலும் ஜாரத்கவீ வீதியிலும் ஆக ஜாரத்கவம் என்ற மத்ய மார்க்கத்திலும், மூலம், பூராடம், உத்திராடம் இந்த மூன்றிலும் வைசுவாநரவீதியிலும், திருவோணம், அவிட்டம், சதயம் இந்தமூன்றிலும் மிருக வீதியிலும், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த மூன்றிலும் அஜவீதியிலும் ஆக வைசுவாநரம் என்ற தக்ஷிண மார்க்கத்திலும் கிரஹங்கள் ஸஞ்சரிக்கும்.

வைசுவாநரம் என்ற தக்ஷிணமார்க்கத்துக்குத்தென்புறம் "பிதுருயானம்" தூமாதிமார்க்கம் என்றும, ஐராவதம் என்றஉத்தரமார்க்கத்துக்கு வடபுறம் ஸப்தரிஷி ஸ்தானத்துக்குத் தென்புறம் தேவயானம் அர்ச்சிராதி மார்க்கம் என்றும் வழங்கப்படும்.

கர்மிகளுக்குத் தூமாதிமார்க்கமும் ஞானிகளுக்கு அர்ச்சிராதி மார்க்கமும் வேதசாஸ்திரங்களிற்சொல்லப்பட்டன. அர்ச்சிராதி மார்க்கத்தில்செல்லும் ஞானிகளை அவரவர்களின் ஹிருதயநாடிகளில்,ஸூர்யன் தனது கிரணங்களை அனுப்ரவேசிப்பித்து நாடீத்வாரமர்கவே ஆகர்ஷிததுத்தனது மண்டலத்திலேற்றுக்கொள்ளுகிறூர். இதைப்பற்றி சாந்தோக்யத்திலும் பகவத்கீதை முதலான சாஸ்திரங்களிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதம் மஹிமை பொருந்திய ஸூர்யமண்டலத்தில் காணப்படும் ஜ்யோதிஸ்ஸின் மத்தியத்தில் பரமபுருஷன் ஸாந்நித்தியமாகவிருக்கிறூர். இது விஷயமாக சாந்தோகியம், "அந்த ராதித்யெ ஹிரண்மய புருஷா திருச்யதே" என்றும் தைத்திரீயம் "ஆதித்யோ வா ஏஷ" "ஏஷபூதபதி" "ஏஷபூதாநாமதிபதி" என்றும் இன்னும அனேக உபநிஷத்துகள் அனேகவிதமாகவும் சொல்லுகின்றன.

அப்பரமேசுவரனையே தினந்தோறும் திரிஸந்தியா காலங்களிலும் ஏகாத்ம பாவனையாகத்தியானித்து உபாஸிக்கும் அதிகாரிகள் இவ்வுலகவின்பங்களை அநுபவிப்பதுடன் நித்யநிரதிசய சாசுவதப் பிர்மானந்த ஸுகம் பெறுவார்களென்பது சித்தம். (தொடரும்)

ஆ. சங்கரசாஸ்திரி, சோழவந்தான்.

ஸத்குரு மஹிமை.

(146-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் முக்கிய சிஷ்யர்களிலும் மேம்பட்டவரான ஸநந்தனர், புத்தியுள்ளவரும், பக்தியுள்ளவருமாயிருந்ததால், ஆச்சார்யாளிடமிருந்து மூன்றுதரம் பாஷ்ய சாந்திசெய்து பாண்டித்தியம் பெற்றார். அதை ஸஹியாத மற்றவர்களின் பொறாமையை யடக்க வெண்ணி, பகவத் பாதாள், கங்கையின் அக்கரையிலுள்ள ஸநந்தனரை அழைத்தபோது, அவர், எல்லையில்லாத ஸம்ஸாரக் கடலைத் தாண்டச் செய்யும் குருசரண பக்தியானது இந்நதியைத் தாரணஞ் செய்விக்காதா என்ன? என்று விரைவாய், ஆற்று வெள்ளத்தில் இறங்கலானார். அத்தருணம் அக்கணமே, ஆகாய கங்கை அவரது அடிகள்தோறும் தாமரை மலர்களை உண்டுபண்ணி நிரப்பினள். அப்போது அவர் அப்பத்மங்களில் அடிகள் வைத்துக்கொண்டே, இக்கரை சேர்ந்து ஆச்சார்யாளின் இருப்பிடமேகினார். உடனே அவரது பக்திக்கு வியந்த ஆச்சார்யாள் அவரை யாலிங்கனஞ்செய்து 'பத்மபாதர்' என்று அவருக்குத் திருநாமஞ் சூட்டினார். இவ்வண்ணமே மற்றொருசமயம் தோடகர் என்ற ஒருவர் பகவத்பாதாளை யண்டினார். அவர் ஆச்சார்யாளின் மனத்திற்கிணங்கினவரும், ஸகல தர்மங்களையும் வழுவாது நடத்தினவரும், பிராணிகளிடம் தயவுள்ளவரும் ஆயிருந்தும், புத்தியில் மட்டிலும் அற்பராயிருந்தார். அவர், அதிகாலையிலேயே, முன் எழுந்து, சரீரசுத்திசெய்து, ஸ்நாநாதி, சமயமறிந்து ஆச்சார்யாளுக்கு பற்குச்சிகளைச் சேகரித்துக் கொடுத்துத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து உபசரிப்பார். மேலும் ஸ்நாநஞ் சமயமறிந்து, தலைதுடைக்கத் துணியைத் தருவார். வஸ்திரம் முதலியன எடுத்துக் கொடுப்பார். மிருதுவாயும் சேர்த்தியாயுமுள்ள ஆஸனத்தைப் போடுவார். செந்தாமரை மலர்போன்ற இருபாதங்களையும் பிடிப்பார். அதிகமாய் உரைப்பானேன்? நிழல்போல் அவர்களை யநுஸரிப்பார். குருவின் அருகில் ஒருபோதும் கொட்டாவி விடுவது முதலிய அநுசிதமான கார்யத்தைச் செய்யார். சோம்பேறித்தனமுள்ள

செயலேயும் செய்யார். கால்களை நீட்டிக்கொண்டு உட்காரமாட்டார். உதாஸீனஞ் செய்யார். மிதர் தவறி வார்த்தையுங்கொடார். ஆச்சார்யாள் நிற்கும்போது நின்று கொண்டும், பேசும்போது அடக்கத்துடன் செவியேற்றுக் கொண்டும், செல்கையில் சென்று கொண்டும், அவர்களுக்குத் தீன்மையைக் கனவிலும் நினையாமலும், இயம்பாமலே நன்மையை நாடிக்கொண்டும் இருப்பார். ஒருசமயம் அவர் ஆச்சார்யாளின் வஸ்திரங்களைத் தோய்க்க நதிக்குச் சென்றிருக்குங்கால், பாடந்தொடங்க வேண்டிய தருணத்தில் ஆச்சார்யாள் சற்று விளம்பித்தனர். அப்போது கணக்கிலாச்சீடர்கள் சாந்திபாடஞ்செய்யப் பாபாக்கும்போது, தோடகரும் வரட்டும் என்று ஆச்சார்யாள் மொழிந்தார்கள். அக்கணம் அதைச்செவியுற்றமற்றமுக்கியசீடர்கள், சாஸ்திர அநதிகாரியானமந்தமதி என்னதிர்பார்க்கப்படவேண்டும்? என்று வாய்திறந்து சொல்லாமலே, ஜாடையாலறியும்படி, அருகிலுள்ள மண்சுவரை நோக்கிப்பார்த்தார்கள். அப்போது பகவத்பாதாள் அவர்களின் அளவற்ற அகந்தையைப் போக்கவும், பக்தரிடம் கருணையைக் காட்டவும் கருதி, அக்கணமே பதினன்கு கலைகளும் அவருக்குத் தோன்றும்படி அநுக்கிரகித்தனர். உடனே அவர் மேன்மைவாய்ந்த ஆச்சார்யாளின் பிரசாதத்தையடைந்து, எல்லாக்கலைகளையுமறிந்த அச்சீடர், குருசீட ஸம்வாத ரூபமுள்ளவையும்,பரம்பொருளைத் தெளிவாய்க் காட்டுகின்றவையும், எளிய நடையுள்ளவையுமான தோடக விருத்தங்களை மொழிந்து கொண்டு ஆச்சார்யாளிடமேகினர். அந்தோ! மிகுந்தவிந்தை; பகவத்பாதாள் எத்தன்மைய மகிமை வாய்ந்தவர்கள். மூகரையும் வாக்மியாகச் செய்தனரன்றோ? அது முதல்தான் தோடக விருத்தங்களைச் சொல்லியதால் இவருக்குத் தோடகர் என்ற பெயர் பரவலாயிற்று.

> யஸ்யதேவே பராபக்தி: யதாதேவே ததாகுரௌ
> தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:

என்ற பெரியோர்மொழிபொய்யாகுமா? இந்த மகிமையறிந்து தான், 'அகதிதா:' என்று பதம்பிரித்து குருபக்தனுக்குச் சொல்லப்படாத விஷயங்களும் விளங்கும் என்று நூலாசிரியர்கள் பொருளுரைக்கின்

றனர். ஆர்யமதத்தின் பெருமை எத்துணை மேன்மை பொருந்தினதென்று சற்று உற்றுப்பாருங்கள். அம்மகிமை வாய்ந்த குருக்களின் திருநாமத்தையுச்சரிக்கலாகாதென குரோர்நாம நக்ருணயாத் என்று சொல்லியபடியே பிரகாராந்தரத்தாலேயே குருநாமாவைப் பிறருக்குச் செப்புகின்றனர்.

இவ்விதம் சாஸ்திரமும், ஸம்பிரதாயமுமிருக்க நாகரீகம்வாய்ந்தவர்களாய்ப் பிதற்றுகின்ற இக்காலத்தவர்கள் தத்துவநூல்களை சட்டைப்பைகளில் போட்டுக்கொண்டு படுக்கும்போதும், நிற்கும்போதும், ரெயில் முதலிய சகடங்களில் ஏறிக்கொண்டு யாத்திரை செய்யும்போதும் (news) பத்திரிகை பார்ப்பதுபோல் பார்வையிட்டுக் கொண்டும், வெளிக்கிளம்பத்தலைப்பட்டனர். இவ்விதமுள்ளவர் அந்தப்ரேயோமார்க்கத்தையடைவரோ? அந்தோ! இதுகலியின்கொடுமை. இதற்கு யாம் யாதுதான் செய்யக்கூடுமோ! அவர்கள் படிக்கும் நூல்களில் வரையப்பட்ட குருமஹிமையை விளக்கும் சொற்கள் மட்டிலும் அவர்களுக்குத் தென்படவில்லையோ? இதுமாத்திரமல்ல, பண்டிதர்களான வைதிகர்களும் காலாநுஸாரிகளாய் எதற்காக அவர்களைப் பின்தொடாத் தலைப்பட்டனரோ? தற்காலத்தில் இங்ஙனம் வாய்ந்ததே எனவருந்திவரையும் பண்டிதர்களிடம் இவை கொள்ள அவகாசமுமுண்டோ. அஃதிருக்கட்டும். குருமஹிமையையும் அவரது பக்தர்களின் பெருமையையும், உரைப்பதற்கு 2000 நாவுபடைத்த ஆதிசேஷரும் வல்லவரோ?

ஈச்வரன் கோபித்தால் குரு கை கொடுப்பார். குரு சினந்தால் காப்பவர் யாருமில்லை என்று எவ்வளவு மகிமை குருக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

வேதாந்த சாஸ்திரங்களை ஸத்குருக்களிடத்தில் சாந்திபுரஸ்ஸரமாய் அப்யஸித்து முறையினின்றும் நழுவாது இருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கவே இவ்வியாஸம் எழுதப்பட்டது. அதற்குப் பயனும் அதிகமாய் உண்டு. ஒவ்வொரு தினமும் பக்தியுடன் ஸத்குருக்களுக்குப் பணிவிடைசெய்து தெரிந்துகொள்ளும் வேதாந்த சாஸ்திர சிரவணத்தால் எண்பது கிருச்சிரபயன்கள்உளவென்று அனேக கிரந்தங்கள் கூறுகின்றன.

யாதொரு வியாஸத்தில் பிரதிபாத்தியர்கள் ஆச்சார்யர்களும், ரஸம் சாந்தியும், பயன் அஞ்ஞான நிவிருத்திரூபமான மோக்ஷமும், ஸாரத்தை யாராய்ச்சி செய்கிறவர்கள் ஸத்துக்களும் ஆகின்றனரோ அத்தகைய பாக்கியத்தை யான் பெற்றதற்கு இத் தமிழா சே அத்தாக்ஷியாகும்.

இவ்வியாஸத்தில் குற்றங்குறை யிருப்பின் அதை எனதாக வும் தோன்றுங்குணத்தை ஸத்குருக்களுடையதாகவும் பாவித்து அருள்புரியும்படி பெரியோர்களை வேண்டி உபஸம்ஹரிக்கலானேன்.

கோ. வை. சுப்பிரமணிய சாஸ்திரி.

திருக்குறள் நீதிநெறி விளக்கம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறள், நந்தமிழ் மொழிக்கு அழியா நிலையையளிக்கும் பெருஞ்சிறப்புவாய்ந்த அரியஅறிவுநூல்; தன்னிடத்தில்லாத விழுப்பொருளொன்றுமில்லை யென்னுமாறு நல்வாழ்வை விரும்புவோர் நன்குணர்ந்து மேற்கொண் டொழுகுதற்குரிய நற்குண நற்செயல்களனைத்தையு முணர்த்தும் உத்தம உலகநூல்; மன்பதைக்கு உறுதி பயப்பனவாகிய அறம்பொருளின்பம்வீடுகளில், சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய வீட்டைக் கடவுள் வணக்கந் துறவாகிய காரணவகையால் ஒருவாறு சுட்டிக்காட்டி, மற்றை மூன்றையும் அவற்றினிலக்கணங்களையுங் கூறுபாடுகளையு முறுப்புக்களையும் ஒழுங்காக வரையறுத்து, வகுத்துத் தொகுத்து, சில்வகை மொழியிற் புலவகைப் பொருளைச் செவ்வனே செறித்து, இனிது விளக்குஞ் சூத்திர வடிவாயமைந்துள்ள அழகிய நீதிநூல்.

அறம் பொருளின்பங்களைத் திறம்படவுரைப்பதாகிய கீழ்க் கணக்கென்னுந் தமிழ்நூல் பதினெட்டினுள்ளும் விஷயக்கோவை

யொழுங்காலும், பொருளினிறைவாலும், சொல்லழகாலும் இதுவே தலைமைவாய்ந்தது. இவ்வாறு இவ்விஷயங்களை யெல்லாம் ஒழுங்கு சேர்த்து இவ்வளவு அழகாகவு மொழுங்காகவு நிறைவாகவும் விளம் புநூல் வேறு எந்தப் பாஷையிலுமில்லை. ஆதிநூலாகிய வடமொழி வேதத்தில் விரிந்து பரந்து இலைமறை காய்போலத் தெற்றெனப் புலப்படாது கிடக்கும் விஷயங்களை யெல்லாந்திரட்டித் தமிழ்மொழி யில் பிற்காலத்தவர்க்கு வெள்ளிடை மலைபோல் விளக்கி யுதவுவதால் உத்தரவேதமென்றுந் தமிழ்மறை யென்றும், பிராமணர்களும் அவர் தம்முள்ளும் ஆண்மக்களுமே ஓதத்தக்க வேதம்போலாது யாவரும் படித்தற்குரியதாயிருத்தலின் பொதுமறையென்றும்,காலதேச ஜாதி மத வித்தியாசங்களுக் கேற்பப் பிறழ்ந்து வேறுபடும் விசேஷக் கொள்கைகளையுந் தருமங்களையுந் தவிர்த்து, என்று மெங்கும் ஒத்து, யாவர்க்கு முடன்பாடானபொதுநீதிகளையே புகட்டலாற் "பொய்யா மொழி" என்றும், முதலிற் கைத்துந் துவர்த்தும் வாய்க்கின்னாதன வாயிருப்பினும் இறுதியில் நோய் தீர்த்துடற்குறுதி பயக்கும்வேம் பையுங் கடுவையும் (வேம்பு முதலிய ஔஷதங்கள்) போல, முன்பு செவிக்கின்னாதனவா யிருப்பினும் பின்பு மனக்கோட்டங்களை நீக்கி உயிர்க்குறுதி நல்கு நற்பொருள்களை அழுத்தமாக வுணர்த்துதலின் "வாயுறை வாழ்த்து" என்றும் பலவாறாக ஆன்றோர்களாற் சிறப்பித் துப் பாராட்டப் பெற்றுள்ள தெய்வநூல் இது. தமிழ் மொழியில் கம்பராமாயணம் எப்படிக்காவியங்களி லொப்பில்லாததோ அப்படித் திருக்குறள் நீதிநூல்களில் நிகரற்றது.

இதிற் கூறப்பட்டுள்ள விதிவிலக்குக்களை நாயனார்தாமெடுத்துக் கொண்ட முப்பாற் பாகுபாட்டுக்கேற்ப இல்வாழ்வானுக்குந் துறவி க்கு மரசனுக்கு மமைச்சன் முதலாயினோருக்குஞ் சிறப்பாக வேறு வேறு விதந்தோதினாராயினும், அவை எல்லாம் யாவர்க்கும் பொருந் திய பொதுத்தன்மையவாயிருத்தல் கவனிக்கத்தக்கது. இல்வாழ் வானுக் கோதிய நடுவுநிலைமை, இனியவைகூறல், அடக்கமுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை முதலியனவும், துறவிகளுக்கு விதித்த கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, கொல்லாமை முதலியனவும், அரசர்க்குணர்த்திய கல்வி, கேள்வி, சிற்றினஞ் சேராமை, பொச்

சாவாமை முதலியனவும், அமைச்சருக்,குரைத்த வினைத்திட்பம், சொல்வன்மை, அவையறிதல் முதலியனவும் அவ்வுவர்க்கேயன்றி ஏனையோர்க்கும் இன்றியமையாத் தகையன வென்பது வெளிப் படை. ஆதலின், இவற்றையோர்ந்து கடைப்பிடித்தொழுகு மாந் தர்கள் இம்மையிற் சுகமும் புகழும் பெற்று வாழ்வார்கள் என்ப திற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இதுவன்றி, இந்நூலை நன்றாய்ப் படித்து இதிலுள்ள விஷயங்களை யெல்லாம் நன்குணர்ந்தவர்கள் பொது விஷயங்கள் எதைப்பற்றியும் பேசவோ, அல்லது எழுதவோ புகுந்தால், பொருள் முட்டுப் பாட்டினுலாவது சொல்வறுமையினு லாவது வருந்தாமல் அவற்றைஇனிது விளக்கி, வித்தரித்து வியவக ரிக்கவல்லுநராவர். இந்நூல் இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்திருப் பினும், ஓதுதற்கு மிகவெளிதாய் ஏழெட்டுச் சொற்களால் யாத்த சிறுகுறள் வெண்பாக்களா லமைந்திருப்பினும் இதில் அருஞ்சொற் பிரயோகங்களும் சொல்லெச்சம் குறிப்பெச்சங்களும், தொகை நிலைச் சொற்றொடர்களும் மிகமலிந்து கிடத்தலானும் ஒவ்வொரு குறளுமிகவிரிவான விஷயத்தைத் தன்னுள்ளே யடக்கிக் கொண்டி ருத்தலானும் இது தமிழிலக்கியங்களிற் பயின்று பாஷையிற்றேர்ச்சி யுற்றவர்களுக்கன்றிப் பிறராலுணர்தற் கரியதாயிருக்கின்றது.

அன்றியும் அரசாங்கத்தாரால் அபிமானித்தாதரிக்கப்பெற்று, ஜீவனோபாயத்துக்கின்றியமையாச் சாதனமாய் நந்தேசமெங்கும் பாவி முன்னேற்றமடைந்துள்ள "இங்கிலீஷ்" பாஷையினபிவிருத் தியினுல் சுதேசபாஷா ஞானங்குன்றியுள்ள இக்காலத்தில், இவ் வரிய நூலை மூலத்திற்படித்துணர்தல் பெரும்பான்மையோர்க் கிய லாமலிருக்கின்றது. ஆகவே, இதுபோன்ற பிறநூல்கள் பலவும், பலர்க்கும் பயன்படாமல் மூடிமுத்திரையிட்ட புத்தகங்களாய்விட் டன. ஆகையால், இந்நூலின் ஒவ்வோரதிகாரத்திலுமுள்ள விஷயங் களைத் தொடர்புறச் சேர்த்துச் சிறிது விரித்து விளக்கி வசனநடை யிற்றந்தால் அவை பலர்க்கும் பயன்படுமெனக் கருதி, இப்பத்திரி கையின் வாயிலாக அவ்வாறு செய்யலுற்றேன். இதின் வழியாக இந்நூலின் பெருமையை ஒருவாறுணர்ந்து, இதை மூலத்திற் படித் தனுபவிக்க வேண்டுமென்னும் ஆர்வ மனத்துதித்து, நம்மவர்கள்

இனிமை வாய்ந்ததும், ஐந்திலக்கண வமைதிநிரம்பியதும், அறிஞர்களாற் சிரோபூஷணமாகக் கொண்டாடப்படும் எத்தனையோ பல நூல்களைப் பெற்றுள்ளதும் அவற்றுக்கெல்லாமேலாகக் 'கம்பராமாயணம் என்னு மொப்புயர்வற்ற காப்பியத்தையுடையதுமான நந் தாய்ப் பாஷையைப் புறக்கணியாது நன்குமதித்து, அன்புடன் கற்கும்படி செய்யவேண்டும் என்பதே இதன் முக்கியநோக்கம். இவ்வெண்ணம்பலித்து முன்போல இனியும் நமது நாடெங்குந் "தமிழரசு" தலையெடுத்துக் குறும்பெறிந்து தனிக்கோலோச்சி நெடுங்காலம் விளங்குமென்றுந் திசையுறத்திண்பணைபோக்கித் தண்சாகை தழைத்து மண்ணகமகிழ விண்ணோங்கிவளர்ந்து நீடுழிநிற்குமென்றும் நான் மனப்பூர்வகமாய் நம்புகின்றேன். அவ்வாறே புலமிகு சங்கப் பலகையிலிருந்து, கலைகணிறைந்து நிலமெல்லாம் விளங்கப் பல கதிர்பரப்பி நிலவிடுந்தமிழை நலமுறவாய்ந்த புலவர் தம் பெருமான் ஆலவாயடிகள் அருளுவாராக.

முதலதிகாரம்—கடவுள் வாழ்த்து.

எப்படி அகரவெழுத்துப் பிறவெழுத்துக்கள் எல்லாந் தன்வழித் தோன்றத் தான் அவற்றுக்கெல்லாம் ஆதியாகித் தலைமைபெற்று விளங்குகிறதோ, அப்படியே பிரபஞ்சங்களை யெல்லாந் தம்மிடத்தே தோற்றுவித்து, அவற்றுக்கெல்லா மாதியாயு மாதாரமாயு மேலாயு முள்ள கடவுளொருவருண்டு. அவர் முதலுமீறுமில்லாதவர்;ஒப்புயர் வற்றவர்; யாவருக்குந் தலைவர்; அவர் எவ்விதக் குற்றமுங் குறையு மில்லாதவர்; அவர் எதையுஞ் சுதந்தரமாய்ச் செய்யவல்லவர்; அவர் இயற்கையான, நிறைந்த, தெளிந்த அறிவினர்; அவருடைய ஆற்றலுக்களவில்லை; இன்பத்துக்கெல்லையில்லை; அவர் ஈசுவரத்துவம், புகழ், வீரியம், செல்வம், ஞானம், அவாவின்மையாகிய சட்குண சம்பன்னர். அவருக்கு எந்தப்பொருளினிடத்தும் விருப்பும் வெறுப்புமில்லை. எவர் மாட்டும் நட்பும் பகையுமில்லை. அவர் சர்வ பிராணிகளிடத்தும் நீங்காத பேரருளுடையவர். அவரே வேதாகமங்களின் வழியாகச் சகல தருமங்களையும் நல்லொழுக்கங்களையும் உலகத்தாருக்கோதியருளியவர். அவர் தாம் உலகங்களை யெல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் இறைவர்.

அவர் எங்குநிறைந்தவராயினும், மெய்யன்பர்களுடைய மாசற்ற மனத்தாமரையையே தமக்குகந்த கோயிலாக் கொண்டுறைபவர். நாம் மானிட சன்மமெய்தி, நல்லறிவுவாய்ந்து வேதாகம சாத்திரங்களைக் கற்பதின் பயன், இத்தகைய கடவுளொருவர் உண்டென்பதையும், அவரே நாஞ்செய்யும் நல்வினை தீவினைக்கீடாக இன்பதுன்பங்களை ஊட்டுவிக்கின்றாரென்பதையும், அதன் பொருட்டு நாம் பல பிறவிகளை யெடுக்கவேண்டு மென்பதையும் நம்பி அவருக்குப் பயந்து, அவராலுணர்த்தப்பட்ட நன்னெறியினின்று சிறிதுந் திறம்பாமல் ஒழுகுவதேயாம். இவ்வாறு நற்குண நற்செய்கைகள் வாய்ந்து நல்லொழுக்கம் பூண்டவர்கள் மனக்கவலையற்று, யாதொரு துன்பமுந் துயரமுமின்றி இம்மையிலின்புற்று வாழ்வார்கள், மறுமையிலுங்கீழான பிறப்புக்களையெய்தி வருந்தியுழலாது, மேலான கதிகளையுற்றுச் சுகமாயிருப்பார்கள். இதுமாத்திரமோ? ஈடுமெடுப்புமில்லாத இவ்விறைவனுடைய இணையடிகளாகிய புணையின்றுணையால் பிறப்பென்னும் பெருங்கடலைச் சுலபமாய்க் கடந்து கரையேறலாம். பிறபற்றுக்களையும் ஆசையையும் விட்டொழித்து அவருடைய பாதங்களையே விரும்பிப்பற்றிப் புகலிடமாகப் புகுந்தவர்களே பொன்விலங்கும் இருப்புவிலங்குமான இருவினைக் கட்டினின்றும் விடுபட்டு அந்தமி லின்பத்து அழிவில் வீடாகிய முத்தியுலகத்தை யுற்று அங்கே நிரந்தரமாய் வாழ்வார்கள். ஆதலால் நம்முடைய மனமொழி மெய்களாகிய முக்கரணங்களையும் அவர்பாற்படுத்தி, அவருடைய பலவகையான வடிவங்களில், நம்மறிவுக்கமைந்ததோருருவத்தை மனதிற்பாவித்துத் தியானித்தும் அவருடைய அநந்தகுணங்களையும் அற்புதச் செயல்களையும் வாயாரப்புகழ்ந்து துதித்தும், காலாற் கோயிலை வலஞ்சூழ்ந்து, கையால் நறுமலர் கொண்டருச்சித்து, தலை மண்ணுறச் சாஷ்டாங்கமாகநமஸ்கரித்தும், நாம் அவரை வாழ்த்தி வணங்கி வழிபடுவோமாக.

கம்பாலயம்
புரசபாக்கம்
சென்னை.

க. இராமரத்நம் ஐயர், B. A.

ஆபுத்திரன்.

பண்டைக்காலத்தில் வாரணாசி என்ற சிறப்புப்பெயர்பெற்ற காசிமா நகரத்திலே 'அபஞ்சிகன்' என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் தக்கபருவத்திலேயே நல்லாசிரியரை அடைந்து வேதவேதாங்கங்களை யெல்லாம் வழுவறக்கற்று வேதபாரங்கதனாய், 'ஆரண உபாத்தியாயன்' என்னும் பட்டமும் பெற்றான். பின்பு அவன் ஆசிரியர் ஆணையால் நல்லறமாகிய இல்லறம் நடத்தக்கருதி, வாழ்க்கைத்துணையாக 'சாலினி' என்னும் ஒரு பார்ப்பனியைமணந்து வாழ்ந்துவந்தான். அங்ஙனம் வாழுநாளில், அவன் மனைவியாகிய சாலினி, மகளிர்க்கு இன்றியமையாத கற்பொழுக்கத்தினின்றும் வழுவி, கணவனுக்குப் பெருந்தீங்கிழைத்தவளானாள். அதுபற்றி அவள் அச்சமும் நாணமும் துக்கமும்கொண்டு அப்பாவத்தைத் தீர்த்துக் கொள்ளக்கருதி, குற்றமுற்ற குலமகளிர் அக்குற்றத்தைப் போக்குதற்குக் குமரிஆடச்செல்லும் அக்காலவழக்கப்படி தான் கன்னியாகுமரியில் நீராடவேண்டுமெனத் துணிந்து தான் கர்ப்பிணி யாயிருந்தும் அதனையுங் கருதாது ஒருவரும் அறியாவண்ணம் அக த்தைவிட்டு வெளிப்போந்து பிரயாணமானாள்.

அங்ஙனம் புறப்பட்ட பார்ப்பனி பல ஊர்களையுங் கடந்து வரு கின்றவள் கொற்கை நகரத்துக்கருகிலுள்ள ஆயர்சேரியிலே சூலால் வருந்தி ஓர்ஆண்மகவைப்பெற்றாள். பெற்றஅவள், "தொடர்ந்த மும் மலமுருக்கி வெம்பவக்கடல் தொலையக் கடந்தஞானியும் கடப்பரோ மக்கள்மேற் காதல்" எனக்கூறியிருப்பவும் தாய்க்குப் பிள்ளைகள்மீது உளதாகும் இயற்கை அன்பும், இரக்கமும், ஒரு சிறிதும் இல்லாது, அக்குழந்தையை ஒரு தோட்டத்தில் போட்டுவிட்டு, குமரித் துறையை நாடி நீங்கினள்; நீங்கவே அக்குழவி உணவுபெறாமை யால் பசியால் கூக்குரலிட்டழுதது. அச்சமயம் அத்தோட்டத்தின் பக்கலில் பசும்புல் மேய்ந்துநின்ற ஒரு பசுவானது, அக்குழந்தை யின் அழுகையொலியைக்கேட்டு, அருகில் வந்து அதன் வருத்தந் தீர நாவால்நக்கித் தன் பால் மடியைக் குழந்தையின் வாயில்விட்டுப் பாலூட்டி ஏழு நாள்வரையும் அப்புறம் இப்புறம் செல்லாது அன் போடு பாதுகாத்துக் கொண்டிருந்தது.

அப்படியிருக்கையில் வயனங்கோடென்னும் ஊரிலிருந்து தன் மனைவியோடு வழிவருகின்ற 'பூதி' என்னும் அந்தணன் ஒருவன் அக்குழந்தையின் அழுகை ஒலியைக்கேட்டுச் சென்று யாருமின்றித் தனியே கிடக்கும் அதைக்கண்டு, கெழுமிய துன்பத்தோடு கண்ணீருகுத்து 'இவன்பசுமகன் அல்லன், என் மகனே' என்று சொல்லி வறியோர் சேமநிதி பெற்றதுபோல் பெருமகிழ்வுபூண்டு புத்திரசெல்வத்தை வழியிடையே கொடுத்தனுக்கிரகித்த இறைவன் திருவருளைச் சிந்தித்துத் தொழுது அக்குழந்தையை எடுத்துத் தோண்மீதுஅணைத்து உவகையோடு விரைந்து தன்னூர்சென்று வீடுசேர்ந்தான். சேர்ந்த அவன் அம்மகவுக்கு 'ஆபுத்திரன்' என நாமம் சூட்டி, அதனை ஆதரத்தோடு 'வறியன் ஒரு செய்யாளன் அச்செய்வினையைக் காக்கும் அதுபோல போற்றிப்புனைந்து வளர்த்துவந்தான். குழந்தை இளம்பிறைபோல் வளர்ந்து ஐந்தாண்டு நிரம்பியது. பூதியும் புதல்வனை உபநயனம் செய்தற்கு முன்னரே எல்லாக்கலைகளையும் நாடக காவியங்களையும் நன்கு பயில்வித்தான்.

ஆபுத்திரனும் அவற்றையெல்லாம் ஐயந்திரிபறக்கற்று 'கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்கஅதற்குத் தக' என்றதமிழ்மறைக்கு இலக்காய் ஐயந்திரிபறக்கற்று அன்பு, அருள், வாய்மை, அடக்கம் முதலிய நற்குணங்களையே பொற்கலனாகப் பூண்டு ஒழுகுவானாயினன். அங்ஙனம் அவன் ஒழுகிவருநாளிலே அவ்வூரிலுள்ள ஓர் அந்தணன் வேள்வி செய்யக்கருதி ஒருபசுவைக் கொணர்ந்து தன்னகத்தினுள் கட்டிவைத்திருந்தான். இதனை அறிந்த ஆபுத்திரன் அப்பசுவை மாணவேதனையினின்றும் விடுவிக்கக் கருதி, அவ்வந்தணன் அகத்தினுட்புகுந்தான். புகுந்த அவன் யாகசாலைக்கருகில் மாலைசுற்றிய கொம்புகளையுடையதாய்த் தனக்கு நோவிருக்கும் அடுதுயரைக்கருதி, அஞ்சி வெய்துயிர்த்துக் கதறி, வேட்டுவர் வலையில் அகப்பட்ட மான்பிணைபோல் வருந்திக்கொண்டிருந்த அப்பசுவைக் கண்ணுற்று 'அந்தோ! என்னே இவ்வந்தணர் தம்செந்தண்மை' என இரங்கி 'இதனை மாணவேதனையினின்றும் நீக்குமாறு களவால் நள்ளிரவில் கவர்ந்து செல்வேன்' எனத்தன்னுள்

கருதி, அவ்வந்தணன் வீட்டில்ஒரு புடைத்தங்கியிருந்து, அன்றிரவில் பசுவைக் கையிற்பற்றிப் பருக்கைக்கற்கள் நிரம்பிய காட்டுவழியாக ஊருக்குப் புறத்தே சிறிதுதூரங் கொண்டுபோய்விட்டான். பின்பு அந்தணர்கள் யாகப்பசுவைக் காணாது துணுக்குற்று, நாற்புறத்துந் தேடுபவர்களாய் அலைந்து ஓரிடத்து அப்பசுபாலகனைப் பசுவோடு அகப்படுத்திக்கொண்டார்கள். பின்னர் அவர்கள் ஆபுத்திரன் கருத்தை அறியாது அவனை நோக்கிப் புலைச்சிறுவா! "இப்பசுவை இரவில் எதற்காகக் கவர்ந்துகொண்டு வந்தாய்'' எனப்பலவாறு கடிந்துரைத்துக் கோலால் அடித்து ஒறுக்கத்தொடங்கினார்கள். அப்பொழுது ஆபுத்திரனை அதிகமாக அடித்து வருத்தும் அந்தண உபாத்தியாயனைப் பசு, தன் கோட்டால் குத்திக் குடரைவெளிப் படுத்திவிட்டு காட்டிற்குள் பாய்ந்து விரைந்தோடி விட்டது.

பின்னும் அதிகமாக வருத்திய அவர்களை நோக்கி ஆபுத்திரன் "வருத்தன்மின்; யான்சொல்வதைக் கேண்மின்; நீங்கள் இப்பசுவை வருத்தத் துணிந்தீர்களே? அது உங்களுக்கு யாது குற்றஞ் செய்தது?

''விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்த நாட்டொட்டுஞ் சிறந்ததன் றீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு உங்களுக்கு வந்தசெற்ற மென்னை?''

"அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர்செகுத் துண்ணாமை நன்று'' என்று தமிழ்மறை முழங்குவதையும் அறியீர்களோ? பசுக்களைக்கொன்று ஆயிரம் வேள்விசெய்து அடையும் பயனை ஒருயிரைக் கொல்லாமையாகிய தருமத்தால் அடையலாமே. இச்செயலை நீவிர்கடைப்பிடியீராயின் உங்களுக்கு அந்தணர் என்னும் பெயர் எவ்வாறு ஏற்கும்'' எனப்பலவிதமான அறவுரைகள்கூறி அவர்களை அருள்வழி ஒழுகுமாறு தெருட்டமுயன்றான்.

அந்தணர்களோ, அவனுரைகளுள் ஒன்றையுங்கேளாது அவனை நோக்கி, "நீ வேதங்களைக் கற்றுணர்ந்தும் வேதவேள்வியை நிந்தனை

செய்யும் பேதையாயிருக்கின்றாய். ஆதலால் நீ பசுமகன் என்பதற்குச் சாலவும் பொருத்தமுள்ளவனாக இருக்கின்றாய்" என்று இகழ்ந்து கூறினார்கள். அங்ஙனம் கூறலும் ஆபுத்திரன், "பசுவின் மகன் அசல முனிவன், மாவின்மகன் கலைக்கோட்டு முனிவன், நரியின்மகன் கேசகம்பளமுனிவன். இவர்களை நீங்கள் உங்கள் குலத்து முனிசிரேஷ்டர்களென்று சிறப்பித்துக் கூறவில்லையா? பசுவின் வயிற்றில் பிறந்தால் வந்தஇழிபு யாது "கள்ளிவயிற்றில் அகில் பிறக்கும்" என்ற நீதிஉரையை நீங்கள் அறியீர்போலும்" என்றுகூறித் தன்னை இகழ்ந்த அவர்கள் வாயை அடக்கினான்.

அப்போது அங்குள்ள அந்தணர்களுள் ஒருவன் "ஓ! இவன் பிறப்பின் வரலாற்றுமுறையை நான் அறிவேன்; முன்னொருநாள் குமரி ஆற்றில் விதிப்படி படிந்து, குமரித்தெய்வப்படிமத்தை வணங்கிவிட்டு வருத்தமிகுந்து வரும் சாலி என்னும் ஒரு பார்ப்பனியைக் கண்டு "உன் ஊர்யாது? நீ எதற்காக ஈண்டுவந்தாய்?வாட்டத்திற்குக் காரணம் என்ன" என்று நான் கேட்டதற்கு அவள், "யான் வாரணாசி என்னும் ஊரிலுள்ள ஆரண உபாத்தியாயன் அபஞ்சிகன் என்னும் அந்தணனது மனைவி; யானொழுகிய தீய ஒழுக்கத்தால் கணவனைப் பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச்சென்றேன். செல்லுகையில் பாண்டியாது கொற்கை நகரத்துக்கு அப்பால் ஒரு காவததூரத்திலுள்ள ஆயர்பாடியிலே ஆண்மகவு ஒன்றைப்பெற்று இரக்கமின்றி அதனை ஆங்குள்ள ஒரு தோட்டத்தில் இட்டுச்சென்றேன். இப்படிப்பட்ட தீவினையாட்டியாகிய எனக்கு நற்கதி உளதாமோ? என்று மிகத்துன்புற்று அழுதாள். அவள்மகனே இவன். இதில் சிறிதும் ஐயுறவு இல்லை. இதை வெளிப்படுத்தலால் யாதுபயன் எனக்கருதி இதுகாறும் உங்களுக்குச் சொல்லாதிருந்தேன். அசுத்தனாதலால் இவனைத் தீண்டாது நீங்குங்கள்" என்றுசொல்ல, ஆபுத்திரன் அதுகேட்டு முனிசிரேஷ்டர்களாகிய அகஸ்தியருப் வசிஷ்டரும் தேவகணிகையாகிய திலோத்தமையின் புத்திரர்களே என்றுகூறி அவர்களைநோக்கி நகைத்தான். வளர்த்தபூதி அந்தணனும் அவனைப் புலைமகனென்று தன்னகத்துக்கு வாவொட்டாது தடுத்துவிட்டான். பின்னர் ஆபுத்திரன் ஆதரிப்பார் ஒருவருமின்றி இரந்துண்டு காலங்கழிக்கக் கருதி,

பிச்சைப்பாத்திரத்தைக் கையிலேந்தி வீடுகள்தோறுஞ் செல்ல அவனைப் 'பசுவைத்திருடின கள்வன்' என்று இகழ்ந்து அந்தணர்கள் ஊர்களில் எல்லாம் அன்னமிடாமல் பிச்சைப்பாத்திரத்தில் கல்லிடத்தொடங்கினார்கள். அதனால், அவன் வேறுபுகலின்றிப் பாண்டியரது இராஜதானியாகிய மதுரையம்பதியை அடைந்து, ஆங்குள்ள சிந்தாதேவியின் (நாமகளின்) கோவிலாகிய கலைநியமத்தின் எதிரேயுள்ள அம்பலப்பீடிகையை அடைந்து, அதனையே தனக்கு உறைவிடமாகக்கொண்டு கையிற் பிச்சைப்பாத்திரமேந்தி இல்லங்கடோறும் சென்று சென்று வாங்கி வாங்கிவந்த உணவை அவ்வம்பலத்தில் அமர்ந்து ஏ! அந்தகர்களே! முடவர்களே! அகதிகளே! நோயாளிகளே! யாவரும் வம்மின், வம்மின், என இரக்கத்துடன் கூவி அழைத்து அவர்களை அன்புடன் அருத்தி எஞ்சிய மிச்சிலைத் தானுண்டு பிச்சைப்பாத்திரத்தைத் தலையணையாகக்கொண்டு இரவில் அவ்வம்பலத்திலேயே கண்படைகொண்டு காலங்கழித்து வந்தான்.

அங்ஙனம் அவன் காலங்கழித்து வருநாளிலே ஒருநாள் மழை பெய்துகொண்டிருக்கும் நள்ளிரவில் சிலர்வந்து ஆபுத்திரனிடம் "எங்களைப் பசிப்பிணி வருத்துகின்றது" என்று வருந்திக் கூறினார்கள்; ஏற்றாண் அல்லது வேற்றாண் இல்லோனாகிய ஆபுத்திரன் அவரது பசியாற்றும் ஆற்றல் இல்லாதவனாய் மிகவருத்தமுற்றான்; அவ்வமையத்தில் கலைநியமத்தில் கோவில் கொண்டிருக்கும் சிந்தாதேவி எழுந்தருளிவந்து "ஏட! வருந்தாதே. இதனைக் கொள்வாயாக. நாடெல்லாம் வசிவளங்குன்றி வற்கடம் உற்றாலும் இவ்வோடு வறுமையை அடையாது. கொடுக்கக் கொடுக்க உணவு வளர்ந்து கொண்டே வரும்" என்று சொல்லித் தன் கையிலுள்ள அக்ஷய பாத்திரத்தை அவன் கையில் கொடுத்தாள். உடனே அவன் அதைப் பணிவுடன் வாங்கி எல்லையில்லாமகிழ்வுபூத்து,

"சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோர் உற்ற இடர்களைவாய்!

என்றுதுதித்து அத்தேவியைத் தொழுது பசியால் வருந்தித் தன்னகம் வந்த அவர்களை ஊட்டி அந்நாள்தொட்டு முட்டின்றி அனைத்துயிர்க்கும் உணவளிப்பானாயினன். உண்பதற்காக மக்கள் பலர் அவனைச்சூழ்ந்துகொண்டார்கள். பறவைகளும் விலங்குகளும் அவனை விட்டகலாது அன்புடன் சுற்றிக்கொண்டன; இவன் உணவூட்டும் ஓசை இடையீடின்றி ஒலித்துக்கொண்டேயிருந்தது; இதனால் இவன் பக்ஷிசாலம் பயன் கொள்ளப்பழுத்த முதுமரம்போல் விளங்குவானாயினன்.

இங்ஙனம் இவன் இடைவிடாது புரிந்துவரும் புண்ணியச்செயலைத் தனது பாண்டு கம்பள நடுக்கத்தால் அறிந்த இந்திரன் அவனுக்குவேண்டும் வரங்கொடுத்தற்கு எண்ணி வளைந்த உடம்புடன் தண்டுன்றி ஒரு விருத்தவேதியன் வடிவங்கொண்டு வந்து ஆபுத்திரனுக்கு முன் நின்று, "நான் இந்திரன்; உனக்கு வரங்கொடுத்தற்கு வந்தேன்; நீ விரும்புவதுயாது? உன்னுடைய பெரிய புண்ணியத்தின் பயனைப் பெற்றுக்கொள்வாயாக" என்றுசொல்ல, ஆபுத்திரன் விலாவெலும்பு ஒடியும்படி நகைத்துப் பரிகசித்து "ஈவாரும் ஏற்பாரும் இல்லாமையால் ஈத்துவக்கும் இன்பமும், தவச்செய்கையும் இல்லாத தேவர் நாட்டுத் தலைவனே! என்பதுபட,

"அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்
கிறைவ னாகிய பெருவிறல் வேந்தே"

எனவிளித்து, வாடியமுகத்தராய் வருந்தி வந்தவர்களது அரும் பசியைத் தீர்த்து அவர்களது இனிய முகத்தை யான் காணும்படி செய்து ஈத்துவக்கும் இன்பமளிக்கும் எனது தெய்வப்பாத்திரம் ஒன்றுமே போதும். நான் விலைவணிகனல்ல. வேறொன்றும் வேண்டற்பாலது இல்லை" என்று மிடுக்காய் மதியாது கூறினன்.

கூறவே இந்திரன் கோபித்து, இவனது அக்ஷயபாத்திரம் எமாந்திருக்க உலகத்தில் பசியால் வருந்துவோர் இல்லையாம்படி செய்வேனென்று தன்னுள் நினைந்து, நாடு முழுதும் வளத்தால் மலியும்

படி மேகங்களை ஏவி மழைபெய்வித்து மிக்க செல்வத்தை உண்டாக்கினன்; அதனால் பன்னீராண்டுவற்கடத்தால் வருந்திய பாண்டி நாடு மழைவள மிகுந்து மாநிலங்கொழுத்தது. அதனால் பசித்து வருவோர் இலராய் அம்பலம் ஊணுண்ணும் அரவம் அடங்கி விடரும், தூர்த்தரும், வேழம்பரும், நடவைமாக்களும் கூடி, வட்டும், சூதும்,வம்பக் கோட்டியும் ஆடுதற்குரிய இடமாய்விட்டது. அதனால் அதுகண்டு ஆபுத்திரன் அம்பலத்தை நீங்கி, ஊர்தோறுஞ் சென்று, "உண்போர் யாரேனும் உளரோ" என வினவத்தொடங்கினன். அது கண்டு செல்வக்களியால் இறுமாப்புற்றோர் அனைவரும் அவனை இகழத் தொடங்கினர்கள். நீ இருந்தாயோ? என வினவுவாருமில்லாமையால் ஆபுத்திரன் பெருஞ்செல்வத்தைக் கடலிடைக் கவிழ்த்தவன் போல வருந்தித் தனியே செல்லுகையில், மாக்கலத்திலிருந்து இறங்கிவந்த பிரயாணிகள் சிலர் வழியிடையில் அவனைக்கண்டு வணங்கி "சாவகநாடு மழையின்றி மிக்கவறுமையுற்று உயிர்கள் பசியால் வருந்தி மடிகின்றன" என்று கூறக்கேட்டு, நீரில் வீழ்ந்து ஆழுவோரை எடுக்கப்போவார்போல் விரைந்து சென்று புலம் பெயர் மாக்களோடு சாவகத்தீவுக்குச் செல்லும் மாக்கலத்தில் ஏறினன்; கலமும் பாய்விரித்துப் புறப்பட்டுச் சென்றது. சில காவததூரம் சென்றதும் கடலானது காற்றினால் கொந்தளிப்பா யிருந்தமையின் சென்ற கப்பல் பாய் இறக்கி மணிபல்லவம் என்னும் தீவத்தினருகில் ஒரு நாள் தங்கியது. (தொடரும்)

ஆ. கார்மேகக் கோனர்,
அமெரிக்கன் காலேஜ், மதுரை.

சம்பகமாலினி.

(138-ம் பக்கத்தொடர்ச்சி)

[சண்டப்பிரசண்டன் கீழே வீழ்ந்து மூர்ச்சையாகின்றான்.]

சாரு—சபாஷ்! சபாஷ்!

[எல்லோரும் காகோஷஞ் செய்கின்றார்கள். செயசிம்மன், அரச னின் முன்பு முழந்தாளிடுகின்றான்]

நீ தான் சூரன், நீ தான் வீரன், நீ தான் சௌரியவான். இச்சபையிலுனக்கிணை யொருவருமில்லை. அஞ்சாநெஞ்சுள்ளவீரனே! உனது உடலைக்கண்டு பயந்தேன். இப்பொழுது மனந் தெளிந்தேன்.

ஜெய— ஐயனே! என்பால்கொண்ட உங்களது நல்லெண்ணமும் ஆசீர்வாதமும் என்னைக் காப்பாற்றின.

சாரு—வீரனே! உன்னை இதுவரை இச்சபையில் கண்டதே இல்லை. உனதுபெயரென்ன?

ஜெய—ராஜன்னு! என்னை ஜெயசிம்மன் என்றழைப்பார்கள்.

சாரு—உன்னுடைய தீரத்திற்குத் தக்க பெயரையே உனக்கு அளித்திருக்கின்றார்கள். உன் வரலாறு என்ன?

ஜெய—மன்னவா! என் வரலாற்றைப் பற்றி யாது கூறுவேன்? என் தந்தையை யறியேன். தாயை யறியேன். நான் ஓர் அநாதை. இன்றுதானிவ்வூரை யடைந்தேன். தங்களையண்டியே ஏதேனும் ஓர் வேலையிலமாலாமெனவெண்ணி யிங்குவந்தேன்.

சாரு—ஜெயசிம்மா! உம்மைப்போன்ற சுத்தவீரனை நானடையவுஞ் சந்தோஷிக்கின்றேன். இன்றுமுதல் நீர் ஓர் பிரபுவாகவிளங்கி வாரும், எனக்கு ஓர் அந்தரங்க வீரராகவும் 12000 குதிரைகளுக்குத் தலைவராகவும் உம்மை நியமித்திருக்கின்றேன். மந்திரி! ஓர் புஷ்ப ஹாரம் கொண்டுவரச்செய்யும்.

(சண்டப்பிரசண்டன் மூர்ச்சை தெளிந்து எழுந்து வருகின்றான்]

மல்லா! உனது கௌரவப் பட்டங்களெல்லாம் எவ்வாறாயின? உனது கர்வமொழிந்ததா? இச்சிறு வீரனிடம் நீ தோல்வியுற்றாயாத

லால் அவனது அடிமையாகிவிட்டாய்! அவனிடம் அடைக்கலம் புகுந்துகொள்—ஜெயசிம்மரே! இனி இவன் உமது அடிமை. அவன் உடலுக்கும் உயிருக்கும் நீரே எஜமானன்.

ஜெய—அடே! உனது இறுமாப்பு வார்த்தைகள் எங்கே போயின! உனதுயிர் உன்னுடலிற் றங்கவேண்டுமெனில் இனி இத்தேசத்திலிருக்காது ஓடிப்போ.

சாரு—ஆம் அவ்விதமே என் கருத்தும். சேவகா! இம்மல்லனை வெளியே அழைத்துச்செல்.

[மந்திரி மாலையை யாசகன் கையில் கொடுக்கின்றான்.]

ஜெயசிம்மரே! இதைப்பெற்றுக்கொள்ளும்.

[சாருதத்தன் ஜெயஸிம்மனுக்கு மாலைசூட்டுகிறான். குணசேனன் மாலையைப்பெற்றுக்கொண்டு போகையில் சம்பகமாலினியைக் கண்டுவணங்க அவ ஒரு புஷ்பத்தை எறிகின்று ; அதையெடுத்துக்கொண்டு செல்கின்றான்.]

சாரு— இன்று எல்லாம் சந்தோஷமாக முடிந்தது. இனிச் சபை கலையலாம்.

(சாருதத்தன் முதலானோர் போகின்றார்கள்.)

ப. பா.—இன்று சபை கூடியதுமுதல் கடைசிவரையிற் கலவரமாகவேயிருந்து...............

சுமந்—ஆமாம். ஆனால் நல்லவேளையாக அவ்விளவீரனால் அவமானமின்றிச்சபை முடிந்தது.

காளி—ஏன் சல்லியன் இன்றுயுத்தம் செய்திருக்கலாகாது? வீண் டம்பத்தைத் தவிர வேறொன்று மில்லை.

ப. பா:—நீர் கூறியது அவன் செவியிற் பட்டால் உமதுபாடு அதோகதிதான். அஃதிருக்கட்டும். இன்று சபையில் அவன் வார்த்தைகளிலிருந்து அவனது எண்ண மின்னதென்பது வெளிப்பட்ட தன்றோ? சுமந்திரர் ஒருவரே தைரியமாக அவனை எதிர்த்தார்.

சுமந்:—நமது அரசர் வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணுகிறார். சல்லியனது வஞ்சனையை யறியாது, அவனைப் பிரதிநிதியாகத் தனக்குப்பின் நியமித்திருக்கிறார்.

(தொடரும்) K. இராமநாதையர்.

* பத்துப் பாக்கள்.

அரசர்கடமை.

தாய்தநயர் நிலையறிந்து வளர்ப்பதுபோல் தன்னாட்டைத்
தாங்கல் நாளும்
சேய்தந்தைக் குறுநெறியைச் செய்வதுபோல் குடிகளுக்குச்
செயல்க ளீதல்
நோயெனினும் மருந்துபோல் பகையடர்த்துப் பின்னுதவி
நுணுகி யாய்தல்
காய்பகைஞர் சரணடைந்தா லருள்சுரந்தே யன்னவரைக்
காத்தல் மன்னே. (1)

ஒருமாவி னெற்காய்த்த பயிரதனை யோர்யானைக்
குணவ தாக
நிரைநிலையாக் கொய்தளித்தா னெடுங்காலஞ் செலுமன்றி
நேர்ந்த போது
வருமாவுந் தனிப்புகுந்து பயிர்கொள்ளின் காணிபல
வறளு மிந்த
இருமையுமாய்ந் தறிவமைந்த இறைகோடல் தொழிலாறு
மியற்றல் மாதோ. (2)

ஆண்டிலிளை யானாக அறிவில்முதி யானாக
அமர்ந்து மாந்தர்
பூண்டவழக் கிறுத்தலினா ல்வாமையா திசைத்தமொழி
பூணாக் கொண்டு
நீண்டநகை முடிதரித்து நிகழ்த்தியபின் றெளிவுற்றார்
நீதி நூல்கள்
காண்டலிறை கோவில்வலஞ் செயுங்காற்றன் குடைதாழ்த்தல்
கடமை யன்றே. (3)

தன்னகரை நள்ளிரவிற் சோதனையின் பொருட்டாகத்
தனித்துச் சென்ற

---

* தஞ்சைக் கண்காட்சிக்குச் செய்தவை,

மன்னவனங் கோர்மனையில் மனைவிமடி தலைவைத்து
மகிழ்நன் றூங்க
வன்னியிடாத் தலைமதலை துள்ளிவிழக் கண்டுமவள்
மணாளன் கொண்ட
பின்னமிலாத் துயில்தனக்கோ ரின்னல்வரா திருந்தப்
பிள்ளை காவாள். (4)

நங்கைநிலைக் கற்பறிந்து வாசியற்றும் போஜன்முத
ணா வேந்தர்
தங்கியவிந் நிலப்பரப்பி லிங்காள்போ லங்காளுந்
தலைமை யாகப்
பொங்குகலா சாலைவயித் தியசாலை தொழிற்சாலை
போரின் வீரம்
எங்குநிறைந் தனவவற்றுள் பெண்வீர மென்பதனை
யியம்பக் கேண்மோ. (5)

பெண் வீரம்.

முந்தொருநா ளமர்க்களத்தில் பின்வாங்காத் தன்மார்பில்
முனையம் பேற
நொந்துயிரைத் தந்தான்தன் செய்திதனை மாறுக
நுவலக் கேட்டுச்
சிந்தைமகிழ்ந் தென்னொருசேய் காலங்கடந் தீன்றமகன்
செறுவி லோடி
அந்தோதன் னுயிரிழப்பின் அறுத்திடுவ னவன்பாலுண்
ணவற்றை யென்று. (6)

வீரமொழி கூறிமகன் மெய்ந்நிலைமை காண்பலென
மேவிக் கண்டு
சாருமுடல் மார்புருகுஞ் சாநோக்கி யகமகிழுந்
தாயின் வீரம்
பாருருகத் தன்கணவன் கள்வனல னென்றுதனம்
பறித்த வீரம்
சேருமிந்து தேயவலி செப்பலென்னோ செந்தமிழின்
சீர்மை சொல்வாம். (7)

தமிழ்ப் பெருமை.

(காட்சி)

குமரிமுத னுன்கெல்லை யுளவேனு மதன்புறத்துங்
குலவுந் தெய்வத்
தமிழுததி நிலைதெரிந்து தொண்டுபுரிந் தவர்பலரிற்
சங்க ரன்தான்
அமிழ்தமொழிப் பனுவலிசை சுந்தரனு மாரியனுக்
கன்ப னுகித்
தமதிறைந்த நள்ளிருளிற் றுள்ளோவப் பாவையகந்
தனித்துக் கண்டு. (8)

ஐயம்.

பொன்னேபொன் னிலமகளோ புனலணங்கோ கலைமானே
புவியார் தேவ
மின்னேமின் மலையனமோ கொல்லியுறை பாவையோ
விராட தேயம்
முன்னேவந் துருவமைந்த மொழிக்குயிலோ மோகனமோ
முத்தி யாரூர்
தன்னேரி லாதமைந்த ஒருவமைதி யெனஐயந்
தரித்து மன்னே. (9)

துணிபு.

காற்சிலம்பால் கன்னிநிலங் கால்தோய்வ தால்மனித
கணமென் றெண்ணி
ஏற்குமுறை பலசெப்பி யிசைப்படுத்தி இவற்களித்தான்
இதனால் ஆவிற்
பாற்சுவையும் கனிரசமும் கோத்தேனும் கற்கண்டும்
பாகும் சேர்ந்தெப்
பாற்பொலியும் பசுந்தமிழின் பெருமைதனை எஞ்ஞான்றும்
பகர்த னன்றே. (10)

மு. வடிவேற்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர், திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல்.

* தமிழ் நூலாராய்ச்சியின் தற்கால நிலைமை.

ஒரு நூலென்றால் அதிற் குணங்களும் குறைகளும் இருத்தல் இயல்பே. குறையேயில்லாத நூலும் குணமேயில்லாத நூலும் இவ்வுலகிற் காணுதல் அரிது. ஆகவே நாம் நூல்களைக் குணம் மிகுந்த நூல்களென்றும், குறைமிகுந்த நூல்களென்றும், குணமும் குறையும் ஒத்தஅளவுடைய நூல்களென்றும் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். நம்முடைய தமிழ்ப் பாஷையில் நடுவிற்கூறிய நூல்களே பெரும்பான்மை. இதுநிற்க.

இந்த மூவகை நூல்களையும் பற்றி ஆராய்ச்சி செய்யுமிடத்துப் பலருந் தழுவிக்கொள்ள வேண்டியன சிலவுள. நூலாராய்ச்சியென்றால் அஃது அந்நூலிலுள்ள குறைகளையே எடுத்துக் காட்டுதலன்றென்பது தமிழரானவர் ஒவ்வொருவர் மனத்திலும் ப்தியவேண்டும். குற்றமே கூறுதல் பொறாமைக் கூற்றேயாம்.

"குற்ற மேதெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வரால்."

என்ற கச்சியப்பர் வாக்கு மிக்க அநுபவத்தின்மேற் பிறந்ததன்றோ? இதனாலே நூல்களிற் குற்றங்கள் மிகுந்துகிடந்தால் அவற்றையெடுத்துக் காட்டாது பொதிந்து மூடிவைக்க வேண்டுமென்று நாம் கூறவரவில்லை. நூல்களிற் குற்றங்காணின் அவற்றை நூலாசிரியர் மனம் புண்ணாகாமல் இன்சொற்களால் எடுத்துக்காட்டி கூடுமானால் அவற்றைப் போக்குமாறு இவையென்று சுட்டலும், குணங்காணின் அவற்றையெடுத்து வியந்து ம்தித்துப்பேசலும் வேண்டும். இவ்வாறு செய்யாவிடின் நூல்களெழுதப்புகுவார் தொகை மிகச் சுருங்கிவிடும்; நம்முடைய பாஷைக்கே இறுதிவிளைப்பதாகும். மற்று மேற்கூறியபடி செய்தாலோ, நூலாசிரியர்கள் ஊக்கங்குறையாமல் மேன்மேலும் புதியநூல்கள் எழுதப்புகுவார்கள்: இவ்வாறு புகுந்து நாடோறும் பழகுதலால் தம்முடைய நூல்களில் நேரக்கூடிய குறைபாடுகளைத் தாங்களே நீக்கிக்கொள்வார்கள்.

---

*இது தமிழ்ப்புலமை நடாத்திக் காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்களால் எழுதப்பட்டதென்று அவருடைய குமாரர் வி. சூ. சாமிநாதன் அவர்களால் தமிழரசுக்கு உதவப்பட்டது.

இனிப் பிறபாஷைகளில் இருத்தல்போல நம்முடைய தமிழ்ப் பாஷையில் ஆராய்ச்சி நூல்களே இல்லையென்று வாய்கூசாமற் சொல்லிவிடலாம். ஆங்கிலரோடு நாம் ஊடாடப்புகுந்த இப்பொழுது தான் இரண்டொன்று வெளிப்படத் தலைப்பட்டிருக்கின்றன, தமிழ் நூற்பயிற்சி யொன்றுமேயுடையார் ஆராய்ச்சி நூலாவது இன்னதென்று அறியார். அவர்கள் செய்வனவெல்லாம் மறுப்புக்களும், கண்டனங்களும், சூராவளிகளும், திவாகரங்களும் இவை போல்வன பிறவுமேயாம். ஆங்கிலப்பயிற்சி மிகுந்து நாகரிகநிலை மிகுந்த இந்நாளினும் அத்தன்மையான நூல்கள் நின்றபாடில்லை. நிந்தைப் பிரதிநிந்தை கூறலும், வஞ்சகமாகப் பத்திரிகைகளிற் பிறர் நூல்களை இழித்துரைத்தலும், பிறர் நூல் நன்றாயிருப்பினும் பொறாமை காரணமாக நன்றன்றெனத் தம் மனத்திற்கு விரோதமாகப் பொய் மொழிதலும் இக்காலத்தில் மிகுந்திருக்கின்றன. இவை யனைத்தும் நாளாவட்டத்திற் குறைந்துபோமென்பது திண்ணம்.

சிலர் புது நூல்கள் எழுதுவதில் யாது பயன்? பழைய நூல்களே போதும்; அவைகள் தாம் நல்லன; மற்று இன்றும் நேற்றும் உதித்தனவெல்லாம் போலிகளே என்று கூறுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறுதற்குற்ற காரணம் தெற்றென விளங்கவில்லை. இத்தன்மையான கொள்கை தொன்றுதொட்டுள்ளதுபோலும். வடமொழிக் காளிதாச மகாகவியும் தமது மாளவிகாக்கினிமித்திர நாடகத்தில் இதைக் குறித்துக் கூறியிருப்பது யாவரும் அறியத்தக்கது.

'தொன்று தோன்றிய யாவவை தூயன
இன்று தோன்றிய யாவவை தீயன
என்றி யம்பு மியல்புண ராமகன்
அன்றி மூதறி வாள ரறைவரோ?'

இஃது இவ்வாறாக, வேறுசிலர் 'நம்மிடத்தில் மகாகவிகளினுடைய வல்லமைக்கீடான வல்லமையில்லாமையால் நாம் அவர்களுடைய நூல்களை ஆராய்தல் அறிவின்மையாம்' எனக்கூறுகின்றனர். என்னே இவர் தம் பேறறிவுடைமை. ஆராய்ச்சித்திறம் வேறு, நூலியற்றுந்திறம் வேறு; ஆகவே ஆராய்வோனிடத்தில் அம்மகா கவிகளைப்போல நூலியற்றுந்திறம் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. இனித் தற்காலத்தில் நம்மவரிடத்தில் ஒரு பெரிய தீ

வழக்கங் குடிகொண்டிருக்கின்றது. ஒன்று ஏதேனும் ஒருநூலைமுற்றிலும் நன்றெனஅளவுக்குமிஞ்சிப் புகழினும் புகழ்வார்கள்; அன்றி மற்றொன்று, அதனை முற்றிலும் தீதென வரம்புகடந்து இகழினும் இகழ்வார்கள். இங்ஙனம் செய்தற்குக் காரணம் அந்நூலாசிரியரிடத்துத் தமக்குள நட்பேனும் பகையேனுமாம். இது நேரிதோ?

இன்னுஞ் சிலர் பிறருடைய நூல்களை ஆராய்ச்சி செய்வோமெனப் புகுந்து நூல்களைப்பற்றிய சில நற்கருத்துக்கள் தம் மனத்திற் கொண்டபின்னர், அந்நூலாசிரியர்கள் உயர்நிலையில் இல்லாதிருந்தாலாவது, தம்மெண்ணத்தின்படி நல்லியல்பினர் அல்லராயினுலாவது, மிக்கபுகழ் படையாதிருந்தாலாவது, அங்ஙனந் தாம்கொண்ட கருத்துக்கள் அனைத்தையும் மாற்றி அந்நூல்களை இழித்துரைக்கின்றனர். அந்தோ! இவர்கள் எவ்வளவு விரைவில் தம் மனத்தை மாற்றிவிட்டனர்.

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்."

என்ற திருவள்ளுவனர் கூற்று வீண்போகாது. இன்னும் அவர்கள் ஆரயவேண்டுவன நூல்களாமேயன்றி நூலாசிரியர்களல்லவே. அவ்வாறாகவும் அவர்கள் நூல்களைவிடுத்து அவற்றின் ஆசிரியர்களைப்பற்றியாராய்தல் குருட்டுத்தனமன்றோ?

ஆகவே இனியேனும் நம்மவர்கள் யாவரும் நூலாராய்ச்சி செய்யுமிடத்து அவற்றின் ஆசிரியர்களது இயல்புகளைநோக்கி மனந்திரிதலின்றிப் பொறுமைக் கிடங்கொடாது குறைகளை இன்சொற்களான் மெல்லெனக்கூறி, நயங்களைப்பெரிதும் எடுத்து வியந்துரைத்து அவ்வந் நூலாசிரியர்களிடத்தில் ஊக்கமெழுப்பி அநுதாபங் காட்டி ஒழுகுவாராக.

அநுபவஸங்கீதம்.

(156-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்படி முறையே ஷட்ஜபஞ்சமக்கிரமமாக ஆராய்ந்து பார்க்குங்கால், ஸப்தஸ்வரங்களுக்கு ஏற்பட்ட பன்னிரண்டுகிரகங்களையும் சுலபமாயறிந்துகொள்ளலாம், ஷட்ஜாதி நிஷாதாந்தங்களான ஏழு

ஸ்வரங்களும் ஸஞ்சரிக்கிற பன்னிருகிரகங்களையும் விவரிக்கிறோம். ஷட்ஜத்துள் பஞ்சமம் எவ்விதம் உற்பத்தியாகிறதோ அப்படியே பஞ்சமத்துள் சதுசுருதிரிஷபமென்ற மூன்றாவது கிரகம் உற்பத்தியாகும். அந்த சதுசுருதிரிஷபத்திலிருந்து, பஞ்சமக்கிரமமாய்ப் பார்க்கும்பொழுது, பத்தாவது கிரகமான சதுசுருதிதைவதம் உண்டாகிறது. அந்த சதுசுருதிதைவதத்திற்குப் பஞ்சமமாக அந்தரகாந்தாரமென்ற ஐந்தாவது கிரகம் உற்பத்தியாகும். அந்த அந்தரகாந்தாரத்திற்கு பஞ்சமமாக, காகலிநிஷாதம் என்ற பன்னிரண்டாவது கிரகம் தோன்றும். அந்தக் காகலிநிஷாதத்தின் பஞ்சமமாகப் பிரதிமத்திமமென்ற ஏழாவது கிரகம் தோன்றும். அந்தப்பிரதிமத்திமத்தின் பஞ்சமமானது சுத்தரிஷபமென்ற இரண்டாவது கிரகமாகும். அந்த சுத்தரிஷபத்திலிருந்து பஞ்சமமாகச் சுத்ததைவதமென்ற ஒன்பதாவது கிரகம் தோன்றும். அந்தச் சுத்ததைவதத்திற்குப் பஞ்சமம் ஸாதாரண காந்தரமென்ற நாலாவது கிரகம் தோன்றும், அந்த ஸாதாரண காந்தாரத்தின் பஞ்சமம் கைசிகிநிஷாத மென்ற பதினொன்றாவது கிரகமாகும். அந்த கைசிகிநிஷாதத்தின் பஞ்சமம் ஆறாவது கிரகமாகிய சுத்தமத்திமமாகும். அந்தச்சுத்தமத்திமத்திற்குப் பஞ்சமந்தான் ஆதியான முதல் கிரகமாகிற ஷட்ஜமாகும்.இப்படியே ஷட்ஜபஞ்சம முறையாய் ஏழு ஸ்வரங்களுக்கும் பன்னிரண்டு கிரகங்கள் அமையப்பெற்றுள்ளன. மேலும், ஷட்ஜமத்திம முறையாயும் பன்னிருகிருகங்களை வகுப்பதுமுண்டு. ஆனால் வந்த கிருகங்கள் திரும்பிவருகிறதனாலும் புனருக்திதோஷம் ஏற்படுவதினாலும் அம்முறையானது முன்னோர்களால் விலக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வரங்கள் ஏழும் பல சுருதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய சுருதி விசேஷங்களைப் பலர் பலவிதங்களான ஆதாரங்களோடு விளக்கியிருக்கிறார்கள். அவற்றுள் சில தவறானமுறைகளுமுண்டு. கூடியவரையில் நம் கர்நாடகஸங்கீதத்தில் பதிந்து நிறைந்துள்ள சுருதிகளைச் சிலரே அறிந்து வெளியிட்டிருக்கிறார்கள். அதில் சில முறைகளை இங்கு வெளியிடுகிறேன். (இன்னும்வரும்)

L. முத்தையா பாகவதர்,

வடக்காவணிமூலவீதி, மதுரை

விடுகதை விஞவிடை.

உருத்திரோத் காரி யுயர்தைம் மதியில்
கருதும் விடுகதைவி ஞவிற்—குறுதி
தவஞான மெப்போது நல்லோர்க் கருளுஞ்
சிவஞான பாசியமாந் தேர்.   குகாம்பிகா தாசன்.

இதேவிடையை D. A. வெங்கட்டாராவ், குசீதர், எம். எஸ். சேஷன் இவர்களும் எழுதியனுப்பியுள்ளர்கள். சிலர், சிவமனபாசியம் என்று விடை யிறுத்துள்ளார்கள். அது அத்துணைப் பொருத்தமான விடையன்று.

பத்திரிகை வரவு.

அதிகச்சந்தா வாநந்த போதினி
மரபு விளங்குந் தாமார் வைசியன்
பொங்குஞ்செல்வப் பங்கஜ லக்ஷ்மி
போதாந்தம் புகட்டும் வேதாந்த தீபிகை
இலங்கையர் புகழார் இந்துசாதனம்
சகத்தின் மிகத்திகழ் ஆத்தும சக்தி
விச்சையுற்றோர்க்கு நச்சினர்க் கினியன்
இம்பரும் புகழுங் கம்பநாடன்
தாணியோர் விரும்பும் தாருலிஸ்லாம்
பட்ச முற்றோசின் க்ஷத்திரிய மித்திரன்
போக மளிக்கும் லோகோபகாரி
தினமே யோங்கிப் புகழ் தனவைசியன்
எங்கும் பாவுங் கோங்கு வேளாளன்
அமயத் துதவரி சமயதிவாகரம்
மெய்யே பகருந் தெய்வபக்தன்
வாரமுற் றோர்க்குப் பேராசிரியன்
நந்தமிழ் விளக்குஞ் செந்தமிழ்ச்செல்வி
இமிழ்திரைத் தாணித் தமிழர் நேசன்
சீரியர் போற்றும் ஆரிய தருமம்
தழங்குந் தமிழைத் தருந் தமிழ் நாடு
அருந்துயர் நீக்கித் தருந் தாய் நாடு
அற்பகங் கொண்டார் பொற்பார் கற்பகம்
சாற்றும் தலைமைத் தமிழரசிற்கு
மாற்றுப்பத்திரிகை யேற்றுவந் தனவே.